# அறிவுக் கட்டுரைகள்

ஆர்.கே.சண்முகம் செட்டியார்

பாரதி பதிப்பகம்

# அறிவுக் கட்டுரைகள்

ஸர். ஆர். கே. சண்முகம் செட்டியார்

பாரதி பதிப்பகம்
தியாகராயநகரம் : : சென்னை-17

முதற் பதிப்பு ; நவம்பர் 1953,

விலை அணா. 0—14—0

Approved by the Text Book Committee for
class use Nondetailed study for forms
4 & 5. Rc. No. 3/54 T. B. C.

செங்குந்த மித்திரன் அச்சகம், சென்னை–1.

# பதிப்புரை

திரு. ஆர். கே. சண்முகம் செட்டியார் உலகப் புகழ்பெற்றவர். உலகத்து அறிஞர்களில் சிறப்பு வாய்ந்தவர். அவர் தமிழ் நாட்டவராக இருப்பது நமக்கெல்லாம் எவ்வளவோ பெருமையா யிருக்கிறது. அமிழ்தினுமினிய தமிழ் மொழியில் அளவு கடந்த அன்பு உடையவர். அவரது எழுத்துக்கள் சக்தி வாய்ந்தவை. இந்நூல் அவரது கட்டுரைகளைத் தாங்கிவருகிறது. இது தமிழகத்திற்கும், பள்ளி மாணவர்களுக்கும் மிகவும் பயன்படும் என்பது திண்ணம். இதை வெளியிட அனுமதி அளித்த திரு. ஆர். கே. எஸ். அவர்களுக்கும், முன்பே இவைகளைப் பிரசுரித்த பத்திரிகைகளுக்கும் நன்றி உரித்தாகுக.

**பழ. சிதம்பரன்,**

நிர்வாகி : பாரதி பதிப்பகம்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி | 7 |
| 2. | நான் கண்ட மகாத்மா | 15 |
| 3. | அமெரிக்கப் பிரயாணம் | 27 |
| 4. | புது உலகம் | 34 |
| 5. | கடன் கொடுத்தார் நெஞ்சம்போல் | 40 |
| 6. | முன்னேற்றத் திட்டம் | 45 |
| 7. | சினிமாக் கலை | 61 |
| 8. | நாட்டின் பொதுக் கடன் | 66 |
| 9. | போாச் செலவு | 72 |
| 10. | அரவிந்த ஆசிரமம் | 81 |
| 11 | பணமும் பஞ்சமும் | 88 |

# 1. வாழ்க்கைக்கு ஓர் வழிகாட்டி

கலைகள் அறுபத்துநான்கு வகைப்பட்டவை என்று நம் முன்னோர்கள் வகுத்திருக்கின்றனர். சுமார் 1800 ஆண்டுகளுக்குமுன் எழுதப்பட்ட சிலப்பதிகாரத்திலும் 'எண் எண் கலையோர் இரு பெரு வீதியும்' என்று வருவது குறிப்பிடத்தக்கது. கலைகள் மக்கள் வாழ்க்கையைப் பண்படுத்தும் சாதனங்களாகும். ஆனால், எல்லாக் கலைகளிலும் சிறந்த கலை, வாழ்க்கைக் கலை. அன்றாட வாழ்க்கையை ஒரு கலையாய்ப் பண்படுத்துபவனைத்தான் மக்களில் சிறந்தவன் என்று சொல்லவேண்டும்.

வாழ்க்கையைக் கலையாய்ப் பண்படுத்துவதற்கு அறிவுதான் கருவி. ஆனால், இயற்கை அறிவைக் கொண்டே எல்லோரும் இந்தப் பயனை அடைய முடியாது. வாழ்க்கையில் என்னென்னவற்றை விலக்க வேண்டும், கையாளவேண்டும், எந்த விதத்தில் கையாள வேண்டும் என்றெல்லாம் எடுத்துச்சொல்ல ஒரு வழிகாட்டி வேண்டும். வாழ்க்கையின் வழி நுட்பங்களை அறிந்த பெரியோர் உலகத்திற்குத் தந்த நூல்களே இவ் வழிகாட்டிகளில் சிறந்தவை.

ஜொராஸ்டர் (Zoroster) கன்பூசியஸ் (Confucius) புத்தர், இயேசு கிருஸ்து, மகமது நபி—இவர்களெல்லாரும் வழிகாட்டிகளாவர். இவர்கள் அவதார புருஷர்களாய் உலகில் தோன்றி வாழ்வின் வழியை மக்களுக்கு எடுத்துக்

காட்டிய மகான்கள். இவர்கள் விளக்கிய அடிப்படையான உண்மைகள் உலக மக்களுக்கெல்லாம் பொருந்தியவை.

எல்லாச் சமயத்தாரும், எல்லா நாட்டினரும் ஒப்புக் கொள்ளக்கூடிய வாழ்க்கை நூல் ஏதாவது உண்டா? உண்டு. அப்படிப்பட்ட நூலை, உலகிற்கு அளித்தது தமிழ். ஏறக்குறைய 2000 வருஷங்களுக்குமுன் தமிழ் நாட்டில் பிறந்த திருவள்ளுவர் இந்தக் குன்றாச் சிறப்பைத் தந்தவர். அவர் தந்த **திருக்குறளே** தலை சிறந்த வாழ்க்கைத் துணை நூல்.

2000 வருஷங்களுக்குமுன் எழுதப்பட்ட ஒரு நூல் இக்காலத்தில் வாழும் மக்களுக்கு வாழ்க்கைத் துணையாய் இருக்க முடியுமா? உலகம் மாறுதல் அடைந்துகொண்டே போகின்றது. மக்களின் நடை, உடை, பாவனை, மனக்கருத்து, நம்பிக்கை, அரசியல் முறைகள், நாகரிகம் இவையெல்லாம் சென்ற 20 நூற்றுண்டுகளில் எவ்வளவு மாறுதல் அடைந்திருக்கின்றன! அப்படி இருக்க, நாம் வாழும் இன்றைய அமைப்புக்குத் திருக்குறள் முழுதும் பொருந்துவதா?'' என்று கேட்பதில் தவறில்லை.

இந்தச் சந்தேகத்தை ஓரளவிற்குச் சுருக்கமாய் ஆராய்தல் இன்றியமையாதது. நடை, உடை, பாவனை, நாகரிகம் இவையெல்லாம் நாம் உடலில் அணியும் ஆடையாபரணங்களைப் போன்றவை. அவை நாளுக்குநாள் மாறுதல் அடையத்தான் செய்யும். நாடுகள் தோறும் அவை மாறுபட்டும் இருக்கும். ஆனால், உயிரின் அடிப்படையான உண்மை என்றும் மாறாதது.

மனித வாழ்க்கையில் எக்காலத்திலும், எந்நாட்டிலும் மாருத அடிப்படையான உண்மைகளேத்தான் திருவள்ளுவர் குறளில் கையாண்டிருக்கிருர். அதனுல்தான் குறளே உலக மக்களுக்கெல்லாம் எக்காலத்திலும் பயன் படும் வாழ்க்கை வழிகாட்டி என்று போற்றுகின்ருேம். அணுவில் உலகத்தை அழிக்கவல்ல அபார சக்தி இருக்கிறதென்று விஞ்ஞான சாஸ்திரம் நிலேநாட்டிவிட்டது. இரண்டு வரிகள் கொண்ட சிறு குறள் வெண்பாவில் உலகத்தைக் காக்கவல்ல தலேசிறந்த உண்மை இருக்கிறதென்று எத்தனேபேர் அறிந்திருக்கிருர்கள்?

குறளில் காணும் வாழ்க்கை விதிகள் மக்களில் ஒரு சிலர் மட்டும் கையாளவேண்டியவையல்ல; உலக மக்கள் எல்லோரும் கையாளவேண்டியவை; கையாளக்கூடியவை. துறவறங் எவ்வளவு மேம்பட்டதாயிருந்தாலும், அது எல்லோரும் அடையக்கூடிய நிலேயுடையதன்று. இந்த நிலேயை அடைய முடியாத ஒருவன் அதற்காகக் கவலேப்படவேண்டியதில்லே. இல்வாழ்க்கையை அறநெறியில் நடத்திவந்தால், துறவறத்தின் பயனே அடையலாம்.

**"அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றிற் புறத்தாற்றிற்**
**போஒய்ப் பெறுவது எவன்?"**

அது மட்டுமன்று. அறத்தின் வழியில் ஒருவன் இல்வாழ்க்கையை நடத்தி வந்தால், அவன் துறவிகள் முதலிய மற்ற எல்லாரையும்விட மேம்பட்டவனுவான்.

**"இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்**
**முயல்வாருள் எல்லாம் தலே."**

தவம், தவம் என்று சொல்லப்படுகின்றதே, அதன் உண்மை என்ன? மனேவி, மக்கள், சுற்றத்தார்

எல்லோரையும் விட்டு, காட்டிற்குப் போய்த் தனித்த நிலைமையில் தியானம் செய்வதுதாஞ தவம்? இம் முறையே தவத்திற்கு அறிகுறி என்று கூறுவதற்கு இல்லை. இல்வாழ்க்கையிலிருந்தே தவம் புரியலாம் என்கிருர் திருவள்ளுவர். காட்டில் தவம் புரிகின்றவர் தம்முடைய நன்மையை மட்டும் நாடுபவர். ஆனல் இல்வாழ்க்கையை மேற்கொண்டவர் பிறர் நலமும் தன் னலமும் கருதுபவர்கள் என்பது திருவள்ளுவர் கருத்து.

**" ஆற்றின் ஒழுக்கி அறன் இழுக்கா இல்வாழ்க்கை**
**நோற்பாரின் நோன்மை உடைத்து."**

பொருளின் மேல் ஆசை வைக்கக் கூடாது என்பதும், பொருளாசை ஒருவன் நல்ல கதியை அடை வதற்கு இடையூருனதென்பதும் பல சமயங்களின் கொள்கை. திருவள்ளுவர் இந்தத் தத்துவத்தை ஒப்புக் கொள்வதில்லை. உலகத்திலுள்ள ஒவ்வொரு மனிதனும் பொருளை விலக்கி விட்டால், உலகம் நடைபெறுவது முடியாது. உலக வாழ்க்கைக்குப் பொருள் இன்றி யமையாதது. இதனுல்தான்,

**" அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை; பொருள்**
**இவ்வுலகம் இல்லாகி யாங்கு" [இல்லார்க்கு**

என்ருர். இதன் மூலம் பொருளின் அவசியத்தை வலி யுறுத்துகிருர். அருள் வளர்வதற்குங்கூட, பொருள் வேண்டும். அன்பு பெற்ற அருள் என்னும் குழந்தை யைப் பொருள் என்னும் செவிலித்தாய் வளர்த்தால்தான் வளரும் என்பதுதான் அவர் உள்ளக் கிடக்கை.

**" அருள் என்னும் அன்பீன் குழவி பொருள்என்னும்**
**செல்வச் செவிலியால் உண்டு."**

பொருள் கட்டாயம் வேண்டும் என்று சொன்ன அவர் அப்பொருளை நியாய வழியிலும், பிறர்க்குத் தீங்கு விளை விக்காமலும் சேர்க்க வேண்டும் என்பதையும் நினைவூட்டு கின்றார். அப்படி நியாயமான வழியில் சம்பாதித்த பொருளின் மூலமாகத்தான் அற வாழ்க்கையையும், இன்ப வாழ்க்கையையும் பெறலாம்.

**"அறன் ஈனும், இன்பமும் ஈனும், திறன் அறிந்து**
**தீதின்றி வந்த பொருள்."**

காலப் போக்கில் அரசியல் துறை எத்தனையோ மாறுதல்களை அடைந்திருக்கின்றது. முடிவேந்தர் ஆண்ட காலத்தில் எழுதப்பட்ட குறள், குடியரசு தலையோங்கி நிற்கும் இக்காலத்திற்கும் பொருந்தியிருப்பது அந்நூலின் அழியாத உண்மைக்குச் சான்றாகும். அரசியலில் அரச னுடைய மாளிகையைப் பற்றியோ அவன் ஆடையாபர ணங்களைப் பற்றியோ, அவர் சொல்லவில்லை. மன்ன னுக்கு இருக்க வேண்டிய குணங்களையே எடுத்துக் காட்டுகின்றார். அவை குடியரசில் ஆட்சித் தலைவனு யிருப்பவனுக்கும் பொருத்தமாய் இருக்கின்றன.

அரசன் தன்னிடம் முறையிட்டுக்கொள்ள வந்த வர்க்குக் காணுதற்கு எளியவனாகி, யாவரிடத்திலும் கடுஞ் சொல் சொல்லாதவனாயுமிருந்தால், அவனுடைய நாட்டை உலகம் உயர்த்திச் சொல்லும். அது அரசனுக்கு மட்டுமின்றிக் குடியரசு ஆட்சித் தலைவனுக்கும் பொருத்தமானதுதானே?

**"காட்சிக்கு எளியன் கடுஞ் சொல்லன் அல்லனேல்**
**மீக்கூறும் மன்னன் நிலம்."**

பொருளாதாரத் துறையில் இக்காலத்தில் அரசாங் கத்தாருக்குள்ள பொறுப்பு மிகப் பெரியது. நாட்டின்

பொருளைப் பெருக்குவதோடல்லாமல், அப்பொருள் ஒரு சிலருடைய கைகளில் போகாமல் அதை ஏழை மக்களுக்கும் தொழிலாளர்களுக்கும் நியாய முறையில் பங்கீடு செய்து கொடுக்க வேண்டியது அரசாங்கத்தின் முக்கிய கடமை என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப் புதிய தத்துவத்தையும் திருவள்ளுவர் அறிந்திருக்கிறார்.

நாட்டிற்குப் பொருள் பெருகும் வழிகளை மேலும் மேலும் உண்டாக்குவதிலும், உண்டான பொருள்களை ஓரிடத்தே தொகுப்பதிலும், அப்பொருளைப் பிறர் கொள்ளாமல் காப்பதிலும், காக்கப்பட்டவைகளைக் குடிகளுக்குப் பங்கீடு செய்தலிலும் வல்லவனுயிருப்பவன்தான் அரசன்.

**" இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த**
**வகுத்தலும் வல்லது அரசு."**

இக்காலக் குடியரசு முறையில் அரசாங்கம் குடிகளின் ஆதரவைப் பெற்று நடக்க வேண்டும். பொய்யில் புலவர் அரசனின் பல குணங்களையும் பற்றிச் சொல்லும்போது, தன் குடிகள் அரசனின் செவி கேட்கக் கூடாத கடுஞ் சொற்களைச் சொன்னபோதிலும், அச்சொற்களைப் பொறுக்கும் குணமுடைய அரசனது குடை நிழலின்கீழ் உலகம் பொருந்தும் என்றார்.

**" செவிகைப்பச் சொல்பொறுக்கும் பண்புடை வேந்தன்**
**கவிகைக்கீழ்த் தங்கும் உலகு."**

மேலே எடுத்துக் காட்டப்பட்ட சில குறள் வெண்பாக்களிலிருந்து உலக நாகரிகம் எவ்வளவு மாறுதல் அடைந்தபோதிலும், திருக்குறள் எல்லாக் காலத்திற்கும்

பொருத்தமான வாழ்க்கைத் துணை நூல் என்பது நன்கு விளங்குகிறது. இது காரணம் பற்றித்தான் வள்ளுவருக்கு 'பொய்யா மொழிப் புலவர்' என்ற சிறந்த பட்டத்தை நம் முன்னோர்கள் வழங்கினார்கள். வள்ளுவர் வாக்கு எக்காலத்திலும் பொய்யாகாது. வாழ்க்கையில் என்றும் அழியாமல் நிலைபெற்ற உண்மைகள் நிறைந்த நூல் திருக்குறள்.

மக்களில் மிகப் பெரும்பான்மையோர் கடைப்பிடிக்க வேண்டிய இல்லற வாழ்க்கையின் பெருமையை வலியுறுத்தும் நூல்களில், திருக்குறளைவிடச் சிறந்த நூல் எந்த மொழியிலும் இல்லை என்று துணிவுடன் சொல்லலாம். மனிதனுக்கு அறிவு உணர்ச்சி உண்டான காலம் முதல், தான் நற்கதி அடையும் வழியை விடா முயற்சியுடன் தேடிக் கொண்டிருக்கின்றான். எல்லாச் சமய நூல்களின் முடிவும் அதுவேதான். மனிதன் யாகம், தவம், துறவறம் முதலிய எத்தனையோ கடினமான வழிகளை நம்பி நடக்கின்றான். ஆனால், எல்லோரும் எளிதில் பின்பற்றக் கூடிய இல்லற வழியும் மனிதனுக்கு நல்ல கதியைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையை—உண்மையை—வள்ளுவர் நமக்குக் காட்டுகிறார்.

அறம், பொருள், இன்பம் என்ற மூன்று பகுதிகளோடு குறளை முடித்து விட்டனரே அன்றி நான்காம் பகுதியான வீட்டைப் பற்றி அவர் சொல்லவில்லை. அறம், பொருள், இன்பம் என்ற மூன்று வழிகளைச் சரிவரக் கடைப்பிடித்து வாழ்க்கையை நடத்தினால் அந்த வாழ்வின் பயனே 'வீடு' அல்லது 'மோட்சம்' என்பது அவரது நம்பிக்கை.

தெய்வலோகம் என்று ஓர் உலகம் மேலே இருக்கிறதென்றும், அவ்வுலகில் வாழும் தெய்வ மக்கள் அழியாத இன்ப நிலையில் மூழ்கி இருக்கின்றார்கள் என்றும் சாதாரண மக்கள் நம்புகிறார்கள். ஆனால், நாம் வாழும் இந்த மண்ணுலகத்தையே தெய்வலோகமாகச் செய்யலாம் என்பது வள்ளுவர் கொள்கை. தான் வாழும் இல்லத்தையே தெய்வ லோகமாகச் செய்து, தன்னையும் தெய்வ மக்களில் ஒருவனாய் மாற்றிக்கொள்ளக்கூடிய சக்தி மனிதனுக்கு உண்டு. இந்த உன்னத நிலையை ஒவ்வொருவருமே எளிதில் அடையலாம். இந்த மண்ணுலகில் அறநெறி தவறாமல் இல்வாழ்க்கையை நடத்துபவன் வானுலகில் வசிக்கும் தெய்வ மக்களில் ஒருவனாவான் என்கிறார், தெய்வப் புலவர்.

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்."**

பாமர மக்களுக்கு நம்பிக்கையையும் ஊக்கத்தையும் ஊட்டிப் பயனையும் தரும் சிறப்பு இதைவிட வேறொன்றுக்கு உண்டோ ?

# 2. நான் கண்ட மகாத்மா

—○❋○—

நான் அப்போது சென்னையில் கலாசாலையில் படித்துக் கொண்டிருந்தேன். தென் ஆப்பிரிக்காவில் குடியேறியிருந்த நம் நாட்டு மக்களின் நிலைமையைப் பற்றி அறிவிக்க காந்திஜி சென்னைக்கு வந்திருந்தார். சுங்குராம செட்டித் தெருவில் வசித்துவந்த திரு. ஜி. ஏ. நடேசன் அவர்களுடைய வீட்டில் அவரைப் பார்ப்ப தற்கு நானும் மற்ற மாணவர்களும் போயிருந்தோம். வெள்ளைத் தலைப்பாகை, வெள்ளைச் சட்டை, அதன் மேல் ஓர் அங்கவஸ்திரத்துடன் தரையில் விரிக்கப்பட்ட ஜமக்காளத்தின்மேல் அவர் உட்கார்ந்திருந்தார். நாங் களும் அவரைச் சுற்றி உட்கார்ந்தோம். மெல்லிய குரலில் தென் ஆப்பிரிக்க இந்தியர்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார். அன்று நாங்கள் கண்ட அவர் குஜ ராத்து நாட்டின் சாமானிய மனிதர் ஒருவரைப்போல் தான் எங்களுக்குத் தோன்றினர். அன்று ஓர் அவதார புருஷரோடு பேசும் பாக்கியம் எங்களுக்குக் கிடைத்த தென்று எங்கள் மனத்தில் தோன்றவில்லை.

பத்து ஆண்டுகள் கழிந்தன. மகாத்மா காந்தி தமிழ் நாட்டில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருந்தார். கோயமுத்தூருக்கும் வரப்போகிறர் என்று தெரிய வந்தது. நான் அப்போது அவ்வூர் நகர சபையில் ஓர் அங்கத்தினராக இருந்தேன். மகாத்மாவுக்கு நகர சபையில்

வரவேற்புப் பத்திரம் வாசித்துக் கொடுக்கவேண்டுமென்று சபையில் சிலர் அறிவித்தனர். எதிர்ப்புப் பலமாக ஏற் பட்டது. மகாத்மா ஒத்துழையாமைப் பிரசாரம் செய்து வருவதால், அரசாங்கத்தோடு ஒத்துழைக்கக் கடமைப் பட்ட நகர சபை அவரை வரவேற்பது சரியன்று என்று சிலர் வாதித்தார்கள்.

"ஒத்துழையாமை இயக்கத்தை நாம் ஆதரிக்கா விடினும், மதுவிலக்கு, தீண்டாமை ஒழித்தல், கதர் முதலிய சீர்திருத்த வேலைகளை நாம் ஏன் ஏற்றுக்கொள் ளக்கூடாது?" என்று பலர் வாதித்தனர்.

"வரவேற்புப் பத்திரத்தில் வெறும் பாராட்டுக்களை மட்டும் சொல்லாமல், நம்முடைய உண்மையான கருத்தை விளக்கமாகச் சொல்லலாமென்றும், நாங்கள் ஒத்துழையாமை இயக்கத்தைக் கண்டிக்கின்றோம் என் றும்கூடக் குறிப்பிடலாம்" என்று நான் சொன்னேன். இப்படி ஒரு வரவேற்புப் பத்திரம் கொடுப்பது மகாத் மாவை அவமரியாதை செய்வதாகுமென்று' பலர் கருதி னார்கள். 'மகாத்மா உண்மைவாதி. நம் மனத்தில் உள்ளதை ஒளியாமல் எடுத்துச் சொன்னால் அவர் மகிழ்ச்சியடைவார்' என்று நான் எண்ணங்கொண் டேன். கடைசியாக, சபையில் பெரும்பான்மையோர் என்னுடைய கருத்துக்கு இணங்கி, நான் குறித்தவண் ணம் வரவேற்புப் பத்திரம் கொடுக்கலாமென்று தீர்மா னித்தார்கள்.

வரவேற்புப் பத்திரத்தைத் தயார் செய்யும் பொறுப்பு என்மீதே சுமத்தப்பட்டது. இவ்விதமான பத்திரங்களில் குறிக்கப்படும் உபசார வார்த்தைகளைச் சுருக்கமாக

எழுதிவிட்டு நகர சபையில் பெரும்பான்மையோருடைய கருத்தையும் நம்பிக்கையையும் தெளிவாக எழுதினேன். "தங்களுடைய ஒத்துழையாமை இயக்கத்தில் எங்களுக்குச் சிறிதேனும் நம்பிக்கை இல்லை. ஒத்துழைப்பின் மூலமாகத்தான் நாடு விடுதலை அடையக்கூடும். ஆனால், நீங்கள் எடுத்துக்கொண்ட சீர்திருத்த வேலைகளை நாங்கள் முழுமனத்தோடு வரவேற்கின்றோம். தீண்டாமையை ஒழித்தல், மதுவிலக்கு, கதர் முன்னேற்றம், கிராம முன்னேற்றம் இவை போன்ற காரியங்களில் நாங்கள் தங்களுக்கு முழு ஆதரவையும் கொடுக்கத் தயாராக இருக்கின்றோம்" என்று தெளிவாக வரவேற்புப் பத்திரம் எழுதப்பட்டது. இவ்விதமான ஒரு புதிய வரவேற்புக்கு மகாத்மா என்ன பதில் சொல்லப்போகிறார் என்று எல்லோரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்தார்கள். நான் நினைத்தபடியேதான் மகாத்மாவின் பதிலும் இருந்தது.

"இன்று நான் என் எதிரிகளின் கூட்டத்தில் இருக்கிறேனென்று பலர் கருதலாம். ஆனால், கோயமுத்தூர் நகர சபையார் என்னுடைய உண்மையான நண்பர்கள் என்று நான் கருதுகின்றேன். வரவேற்புப் பத்திரத்தில் வழக்கம்போல் வெறும் புகழுரைகளைச் சொல்லாமல் அவர்கள் தங்கள் உண்மையான கருத்துக்களை விளக்கியிருப்பது எனக்கு அளவிலா மகிழ்ச்சியைக் கொடுக்கிறது. என்னுடைய ஒத்துழையாமை இயக்கத்தில் உங்களுக்கு நம்பிக்கை இல்லையானால் அதை முற்றிலும் மறந்துவிடுங்கள். அதற்காக நான் வருந்தப்போவதில்லை. நீங்கள் குறிப்பிட்டுள்ளபடி எனது சீர்திருத்த வேலைகளில் உங்களுக்கு நம்பிக்கை உண்டு என்று காட்டியிருப்பதே

எனக்குப் போதுமானது. அவ்வேலைகளில் ஈடுபடுங்கள்'' என்று பதில் அளித்தார்.

1936 ஆம் ஆண்டு பின்னும் ஒருமுறை மகாத்மா கோயமுத்தூருக்கு எழுந்தருளியபோது என் வீட்டில் ஒரு வாரம் தங்கியிருந்தார். அப்போதுதான் அவருடன் நெருங்கிப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. நாள்தோறும் அதிகாலையில் உலாவுவதற்குப் புறப்படுவார். நானும் அவருடன் செல்வது வழக்கம்.

ஒருநாள் காலையில் ஏதோ காரணத்தால் நான் அவருடன் போக முடியவில்லை. காலை சுமார் 8 மணிக்குத் திரும்பியவுடன் என்னை உடனே பார்க்கவேண்டுமென்று தெரிவித்தார். என்ன செய்தி என்று தெரிவதற்காக அவர் இருக்கும் அறைக்குச் சென்றேன்.

''இவ்வூர் போலீஸ் அதிகாரியை உனக்குத் தெரியுமா?'' என்று அவர் கேட்டார்.

''சிறிது தெரியும்'' என்று சொன்னேன்.

''நீ உடனே அந்தப் போலீஸ் அதிகாரியிடம் தூது போகவேண்டும்'' என்றார்.

செய்தி என்னவென்று கேட்டேன். அதற்கு மகாத்மா, ''தெருவில் போகையில் எண்ணெய் விற்கும் ஓர் எளிய மனிதன், தோள்மேல் உள்ள ஒரு மூங்கிலின் இருமுனையிலும் தொங்கிக்கொண்டிருக்கும் இரண்டு எண்ணெய் டின்களைச் சுமந்து போய்க்கொண்டிருந்தான். எதிரில் ஒரு போலீஸ் கூட்டம் ஓட்டமாக வந்துகொண்டிருந்தது. எண்ணெய்க்காரன் ரஸ்தாவின் மத்தியில் போய்க்கொண்டிருக்கவே, ஒரு போலீஸ்காரன்

தன்னுடைய ஓட்ட வேகத்தில் அவனை மோதித் தள்ளி விட்டுப் போனான். எண்ணெய்க்காரனும் கீழே விழுந் தான்; டின்களில் இருந்த எண்ணெயும் சிந்திவிட்டது. போலீஸ் கூட்டத்தில் எவரும் இந்தச் சம்பவத்தைப் பற்றிக் கவலைப்படவே இல்லை. சிலர் எண்ணெய்க்கார னைப் பார்த்துச் சிரித்துப் பரிகாசம் செய்தார்கள்" என்று கூறினார் மகாத்மா. எண்ணெய்க்காரனையும் கூட்டிக்கொண்டு என்னுடைய பங்களாவுக்கு வந்து சேர்ந்ததாகவும் அறிவித்தார்.

நடந்த விஷயத்தை நான் அவர் வாயினால் கேட்ட பின், "கேஸ் ஏதாவது கொடுக்கவேண்டுமா?" என்று கேட்டேன். "கேஸ் எதுவும் வேண்டியதில்லை. போலீஸ் மேலதிகாரியிடம் சாந்த தூதனாக நீ போய், இதற்கு நிவர்த்தி தேடவேண்டும்" என்றார். போலீஸ் மேலதிகாரியும், இந்த அக்கிரமத்தைச் செய்த போலீஸ்கார னும் இந்த எண்ணெய்க்காரனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும். சிந்திப்போன எண்ணெயின் விலையையும் இவனுக்குக் கொடுக்கவேண்டும். இதுதான் நீ செய்ய வேண்டிய வேலை" என்றார்.

அவ்வூர் போலீஸ் மேலதிகாரி ஒரு முரட்டு வெள் ளைக்காரன். என் தூது வெற்றி அடையும் என்னும் நம்பிக்கையே இல்லாமல் நான் அதிகாரியிடம் போய், நடந்த விஷயங்களைச் சொல்லி, மகாத்மா என்ன நிவர்த்தி யைத் தேடுகின்றார் என்பதையும் அவரிடம் சொன் னேன். அதிகாரி இதற்குச் சம்மதப்படவில்லை.

"நீங்களே மகாத்மாவிடம் வந்து பேசினால், நலமா யிருக்கும்" என்று அவரிடம் சொன்னேன்.

சிறிதும் மனமில்லாதவராக அவ்வதிகாரி முணு முணுத்துக்கொண்டே என்னுடன் வந்தார். மகாத்மா விடம் பத்து நிமிடம் பேசியதும், வெள்ளை அதிகாரி எண்ணெய்க்காரனிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, எண்ணெயின் விலையைத் தாமே கொடுப்பதாகவும் ஒப்புக் கொண்டார்.

இச் சந்தர்ப்பத்தில் காந்தியாருடைய அன்பு மார்க் கத்தின் பலனை நான் நேரில் கண்டேன்.

* * *

அன்று மாலை மகாத்மாவின் போட்டோ ஒன்றை எடுத்துக்கொண்டு, அதில் அவருடைய கையெழுத்தை வாங்கவேண்டுமென்று அவர் இருக்கும் அறைக்குச் சென்று கேட்டேன்.

"என்னுடைய கையெழுத்தை இந்தப் போட்டோ வில் போடவேண்டுமென்றால், அதற்குச் சரியான விலை நீ கொடுக்கத் தயாராக இருக்கின்றாயா?" என்று கேட்டார்.

"எவ்வளவுதான் பணம் கேட்டுவிடுவார், பார்ப் போம்!" என்று நினைத்து, "விலை கொடுக்கத் தயார். எவ்வளவு தொகை வேண்டும்?" என்று கேட்டேன்.

"எனக்கு நீ பணம் ஒன்றும் கொடுக்கவேண்டாம். நான் கேட்கும் ஒரு வாக்குறுதியை கொடுத்தால், அதுவே சரியான விலையாகும்" என்றார்.

என்ன கேட்கப்போகின்றாரோ என்று தெரியாமல், "என்றால் என்ன ஆகவேண்டும்?" என்று கேட்டேன்.

"நாள்தோறும் அரைமணி நேரத்துக்குக் குறை யாமல் கைராட்டையில் நூல் நூற்பதாக நீ எனக்கு வாக் குறுதி செய்யவேண்டும்" என்றார்.

சற்றுநேரம் யோசித்து, "இது என்னால் முடியாத காரியம்" என்று சொன்னேன். நான் சொன்ன பதில் அவருக்கு என்மீது வெறுப்பு உண்டாக்கும் என்று நினைத்தேன். ஆனால், அவர் "நீ சொன்ன உண்மையான பதிலைப் பாராட்டுகின்றேன். எனக்கு வாக்குக் கொடுத்துத் தவறுவதைவிட, உன் அசக்தியை ஒப்புக் கொண்டதே மேல்" என்றார்.

"நான் ஒளியாமல் உண்மை பேசினதை ஒரு விலையாக வைத்துக்கொண்டு கையெழுத்துக் கொடுக்கக் கூடாதா ?" என்று கேட்டேன்.

"நான் ஒரு 'பனியா': (வர்த்தகன்) நீயும் ஒரு 'பனியா': ஆனால் வாணிபத்தில் நீயே வென்றுவிட்டாய்." என்று சிரித்துக்கொண்டே போட்டோவில் கையெழுத்திட்டார்.

* * *

திருவாங்கூர் சமஸ்தானத்தில் ஹரிஜனங்களுக்கு ஆலயங்கள் திறக்கப்பட்டன. இந்த விழாவைக் கொண்டாட மகாத்மா திருவனந்தபுரம் சென்றிருந்தார். நான் அப்போது அடுத்த கொச்சி நாட்டில் திவான் பதவியில் இருந்தேன். திருவாங்கூரில் ஆலயங்கள் திறக்கப்படவே, கொச்சியிலும் பெரிய கிளர்ச்சி உண்டாயிற்று. இந்த விஷயத்தில் எனக்கு என்ன ஊக்கம் இருந்தபோதிலும் கொச்சி மன்னர் அவ்வளவு ஊக்கம் காட்டவில்லை. அவர் ஒரு பெரிய வைதிகர். ஹரிஜன ஆலயப் பிரவேசத்திற்கு ஒருநாளும் அவர் சம்மதிக்கமாட்டார். என் நிலைமை மிகவும் சங்கடமாகிவிட்டது. இந்த நிலைமையில் திருவனந்தபுரத்திலிருந்து மகாத்மா எனக்கு ஒரு தந்தி

அனுப்பியிருந்தார். அத் தந்தியில் பின் வருமாறு குறிக் கப்பட்டிருந்தது:

"கொச்சி நாட்டிற்கு ஆலயப் பிரவேசப் பிரசாரத் திற்கு நான் வரவேண்டும் என்று சிலர் மிகவும் வற் புறுத்துகிருர்கள். நீ திவான் என்பதை மறந்து, என் நண்பர் என்னும் நிலைமையில் எனக்கு என்ன ஆலோ சனை சொல்லுகின்ருய்? உன்னுடைய உண்மையான கருத்தை உடனே தெரிவிக்கவும். நான் கொச்சிக்கு வரலாமா? வேண்டாமா?"

இந்தத் தந்தியைப் பார்த்தவுடன் என்ன செய்வ தென்றே எனக்குத் தோன்றவில்லை. மகாத்மாவை ஓரிடத்திற்கு வரவேண்டாம் என்று சொல்வதற்கு யாருக் காவது மனம் வருமா? ஆனல் அவரை வரும்படி சொன்னல், கொச்சியில் கிளர்ச்சி அதிகம் ஏற்படும். வயது முதிர்ந்த வைதிக மகாராஜாவுக்கும் மனக்கவலை ஏற்படும். இவற்றை யெல்லாம் நன்கு சிந்தித்து,

"கொச்சிக்கு நீங்கள் வருவது எங்களுக்கு ஒரு பெரும் பேறேயாகும். எனக்கும் அளவிலா மகிழ்ச்சி யைக் கொடுக்கும். ஆனல் உமது திட்டத்தைக் கேட்ட வுடன் வயோதிக மகாராஜாவின் மனம் உடைந்துவிடும். இவற்றை யெல்லாம் யோசித்துத் தங்கள் இஷ்டம்போல் செய்யலாம்" என்று பதில் தந்தி அடித்தேன்.

உடனே மகாத்மாவிடம் இருந்து மறுபதிலும் வந்துவிட்டது: அதில் "கொச்சியின் நிலைமையை நான் நன்ருக அறிவேன். உன்னுடைய சங்கடமான நிலைமை யும் எனக்குத் தெரிந்திருக்கிறது. நான் இப்போது

கொச்சிக்கு வருவதில்லை என்று தீர்மானித்துவிட்டேன்'' என்று குறிப்பிட்டிருந்தது.

* * * *

டெல்லியில் நிதியமைச்சர் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். வங்காளத்திலிருந்து மகாத்மா டெல்லிக்கு வந்து சேர்ந்தார். மறுநாளே அவரைத் தரிசிக்க வேண்டுமென்று பிர்லா இல்லத்திற்குச் சென்றேன். அவருக்கென்றே தனிப்பட்ட சிரிப்புடன், ''வாருங்கள், ஐயா! உட்காருங்கள்' க்ஷேமம்தானு?'' என்று தமிழில் உபசாரமொழி கூறி அழைத்தார்.

நானும் தமிழிலேயே, ''நான் க்ஷேமம்தான், சுவாமி! இன்று முதல் என்னிடம் நீங்கள் தமிழிலேயே பேச வேண்டும் என்று கோருகிறேன்'' என்றேன். உடனே சிரித்தார். அதற்குமேல் அதிகம் தமிழ் பேச அவருக்குத் தெரியாது. தென்னுப்பிரிக்காவில் தமிழ் மக்களிடையே வேலை செய்தபோது சில தமிழ் வார்த்தைகளை மட்டும் படித்திருந்தார். ஆதலின் மேற்கொண்டு உரையாடலை ஆங்கிலத்திலேயே ஆரம்பித்தார்.

''சுதந்திர இந்தியாவில் நீ மந்திரி ஸ்தானம் பெற்றிருக்கின்ருய், உன்னுடைய தோழர்களாகிய மற்ற மந்திரிகளுக்கு நீ தமிழ் கற்றுக்கொடுக்க வேண்டும். அது உன்ஞல் முடியாவிட்டால், நீ ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்ள வேண்டும்'' என்ருர்.

''நான் ஹிந்துஸ்தானி கற்றுக்கொள்வது எளிது என்று எனக்குத் தோன்றவில்லை. தங்களுடன் நாள் தோறும் முப்பது ஆண்டுகளாக நெருங்கிப் பழகிய ராஜாஜி அவர்களே சரியாக ஹிந்துஸ்தானி பேசக்

கற்றுக்கொள்ள முடியவில்லை என்றால், என்னால் எப்படி முடியும் ?'' என்றேன்.

இவ்வாறு கூறியதைக் கேட்டதும் பலத்த சிரிப்புச் சிரித்தார்.

* * * *

டெல்லியில் மகாத்மா உண்ணாவிரதம் ஆரம்பித்து விட்டார். இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட பாகப் பிரிவினையில், நாம் பாகிஸ்தானுக்குக் கொடுக்க வேண்டிய 55 கோடி ரூபாய் பண விஷயத்தில் தகராறு ஏற்பட்டது. உண்ணாவிரதம் ஆரம்பித்த மறுநாள், இது சம்பந்தமாக மகாத்மா என்னிடம் பேச விரும்புகிறார் என்ற செய்தி வந்தது. காலை ஒன்பது மணிக்குப் பிர்லா மாளிகைக்குச் சென்றேன்.

டெல்லியில் அப்போது குளிர்காலம். பிர்லா வீட்டுப் பூந்தோட்டத்தில் வெயிலில் ஒரு கட்டிலின் மீது அவர் படுத்திருந்தார். நான் வந்த சிறிது நேரத்திற் கெல்லாம் பண்டித ஜவாஹர்லால் நேரு, ஸர்தார் பட்டேல், டாக்டர் மத்தாய் இவர்களும் வந்து சேர்ந் தார்கள்.

மூன்று மணி நேரம் நமக்கும் பாகிஸ்தானுக்கும் ஏற்பட்ட தகராறு விஷயமாகப் பேச்சு நடந்தது. சட்டப்படிக்கும், நாம் செய்த ஒப்பந்தப்படிக்கும், அந்தச் சமயம் ரொக்கப் பணத்தைக் கொடுக்க நாம் கட் டுப்படவில்லை என்று நானும் ஸர்தாரும் வாதாடினோம். நாங்கள் சொல்வனவற்றை யெல்லாம் பொறுமையுடன் கேட்டு பிறகு, மெல்லிய குரலில், ஒரு மணி நேரம் ஆராய்ச்சி செய்து ''பாக்கிஸ்தான் என்ன தவறுகள்

செய்தபோதிலும், இந்தியாவின் அஹிம்ஸா தர்மத்துக்கு முரண்பாடாக இருக்கிறது உங்கள் மனப்பான்மை" என்றார். அவர் பேசப் பேச நாங்கள் செய்த முடிவு நியாயம் பொருந்தியது அன்று என்பது எங்கள் மனத்திலேயே தோன்றிவிட்டது.

மறுநாளே 'காபினெட்' கூட்டத்தில் 55 கோடி ரூபாய் ரொக்கத்தை உடனே பாக்கிஸ்தானுக்குக் கொடுத்துவிடுவதென்று தீர்மானித்துவிட்டோம்.

இந்தப் பேச்சு வார்த்தையின்போது ஒரு சிறு வேடிக்கை நடந்தது. வெயில் அதிகமாகவே, நான் என்னுடைய கைகுட்டையை எடுத்துத் தலையில் கட்டினேன். இதைப் பார்த்தவுடன் மகாத்மா. ஜவாஹர்லால் நேருவிடம் ஏதோ மெல்லப் பேசினார். உடனே ஜவாஹர்லால் நேரு பங்களாவுக்குள் போய் வெய்யிலுக்கென்று பர்மா தேசத்தார் தலையில் அணியும் கூடை போன்ற ஒரு பெரிய தொப்பியை எடுத்து வந்து மகாத்மாவின் கையில் கொடுத்தார். மகாத்மாவும் வெம்மை பொறுக்காமல் தொப்பியை அணிந்துகொள்ளப் போகிறார் என்று நான் நினைத்தேன். தொப்பியைக் கையில் வாங்கி, அதை என்னிடம் நீட்டி 'இதைத் தலையில் அணிந்துகொள்' என்றார்.

*   *   *   *

ஜனவரி மாதம் 30ஆம் தேதி, மாலை சுமார் ஐந்தரை மணி இருக்கும். டெல்லியில் என்னுடைய அலுவல் அகத்தில் வேலை பார்த்துக்கொண்டிருந்தேன். என்னுடைய 'ஸெக்ரடரி' ஓடிவந்து, "மகாத்மாவை யாரோ சுட்டு விட்டார்களாம்!" என்றார். அவர் என்ன

சொன்னர் என்று அந்தச் சமயம் எனக்குத் தோன்ற வில்லை. மேஜை மேலிருந்த காகிதங்களை யெல்லாம் அப்படியே விட்டுவிட்டு எழுந்து வெளியே ஓடினேன். என்னுடைய வண்டியிலேறி பிர்லா வீட்டுக்குச் சென் றேன். கூட்டம் அதிகம் சேரவில்லை. மகாத்மா தங்கும் அறைக்குள் ஓடினேன்.

தரையில் விரிக்கப்பட்ட மெத்தையின்மீது மகாத்மா படுக்க வைக்கப்பட்டிருந்தார். ஜவாஹர்லால் நேருவும் வந்தார். ஸர்தார் பட்டேலும் அருகே உட்கார்ந்துகொண்டிருந்தார். தலைப்பக்கம் மகாத்மாவின் பேத்திகள் விம்மி விம்மி அழுத வண்ணம் கீதையைப் படித்துக்கொண்டிருந்தார்கள். என் வாழ்க்கையில் நான் கண்ணீர்விட்டு அழுதது மூன்று முறையாகும். அன்று அழுதது மூன்ருவது முறையாகும்.

மகாத்மாவைப் பார்க்கும்போது அவர் குண்டு பட்டவர் என்ருவது, உயிர் போன உடலினர் என் ருவது தோன்றவில்லை.

மறுநாள் அவரைத் தகனம் செய்தோம். சந்தனக் கட்டையின் தீ ஓங்கி எரிந்து ஒளிவிட்டது. ஆனல், அந்த வெளிச்சத்தோடு உலக சோதியும் மறைந்தது.

# 3. அமெரிக்கப் பிரயாணம்

—O✻O—

சில தினங்களுக்கு முன்பு என்னுடைய நண்பர் ஒருவர், என்னைச் சந்தித்தபோது, "நீங்கள் அமெரிக்கா போயிருப்பதாகக் கேள்விப் பட்டேனே! இதற்குள் திரும்பி வந்துவிட்டீர்களா?" என்று கேட்டார். "ஆம்! இரண்டு மாதங்களுக்குள் இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுப்போய், அங்கே ஒரு முக்கியமான வேலையை முடித்துக்கொண்டு, ஊருக்குத் திரும்பியாய் விட்டது. சாதாரணமாக இந்தியாவிலிருந்து அமெரிக்காவுக்குப் போய் வருவதென்றால், போகவும், வரவும் 40 நாட்கள் கடற்பிரயாணம் செய்யவேண்டும். இப்போதோ வென்றால், இந்தியாவிலிருந்து புறப்பட்ட மூன்றே நாளில் அமெரிக்காவை அடையலாம். கோயமுத்தூரிலிருந்து டில்லிக்குப் போவதற்கு எவ்வளவு நாளாகின்றதோ, அவ்வளவு நாள்தான் கராச்சியிலிருந்து அமெரிக்கா போவதற்கும் ஆகும். விஞ்ஞானத்தின் மகிமை உலகத்தையே சிறிதாக்கிவிட்டது!

ஒரு நாள் காலை 8 மணிக்கு நான் கோயமுத்தூரில் என் வீட்டிலிருந்தபோது, மேன்மை தங்கிய கவர்னர் அவர்களுடைய ஆபீசிலிருந்து டெலிபோனில் என்னைக் கூப்பிடுவதாகச் செய்தி வந்தது. என்னவென்று விசாரித்ததில், அமெரிக்காவில் உலக மகாநாடு சமீபத்தில் கூடப்போவதாகவும், அந்த மகாநாட்டிற்கு இந்தியா

கவர்ன்மென்டின் பிரதிநிதிகளில் ஒருவராக நான் போக முடியுமா என்று கேட்பதாகவும் தெரிந்தது. "நான் சரி" என்று ஒப்புக்கொண்டேன். ஆகாய விமானம் வழியாகப் பிரயாணம் செய்வதற்குத் தயாராக இருக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளை உடனே முடித்துவிட்டேன். அமெரிக்காவுக்கு ஆகாய விமான மார்க்கமாகப் பிரயாணம் செய்வதற்குச் சாமான் தயாரிப்பது மிக எளிது. கோயமுத்தூரிலிருந்து சென்னைக்குப் போவதற்கு எவ்வளவு சாமான்களைக் கட்ட வேண்டுமோ அதில் ஒரு பாதி கூடத் தேவையில்லை. அமெரிக்கப் பிரயாணத்திற்குப் படுக்கையும் உணவுப் பாத்திரமும் வெள்ளிக் கூசாவும் வேண்டா; ஆகாய விமானத்தில் 65 ராத்தல் எடைக்குமேல் எடுத்துக்கொண்டு போக முடியாது. உடுப்புக்கள் அடங்கிய ஒரு பெட்டியும், சில புத்தகங்கள், பேனா, காகிதம் முதலியவைகள் அடங்கிய ஒரு சிறு பையும் இருந்தால் போதும். "படுக்கை அவசியமில்லையா?" என்று ரயில்வே ஸ்டேஷனில் ஒரு நண்பர் கேட்டார். மேல்நாட்டுப் பிரயாணங்களுக்கு படுக்கை தேவையில்லை. கப்பலோ, ரயிலோ, ஓட்டலோ, நண்பர்களுடைய வீடுகளோ, படுக்கை வசதியை அளித்துவிடும். உடுப்புக்களின் எண்ணிக்கையும் அதிகமாக வேண்டியதில்லை. ஓர் ஊருக்குக் காலை நேரத்தில் போய்ச் சேர்ந்தவுடன், அழுக்கடைந்த ஆடைகளைச் சலவைக்குக் கொடுத்தால், வெகு நேர்த்தியான சலவையுடன் அன்று மாலை ஆடைகள் திரும்பி வந்துவிடும். இந்த வசதியிருக்கும்போது, சில ஆடைகள் மட்டும் கைவசம் இருந்தால் போதுமானது.

அமெரிக்காவுக்குப் போகும் விமானம் கராச்சியிலிருந்து புறப்படுகின்றது. சென்னையிலிருந்து கராச்சிக்குப் போக, விமான வழியாகவே ஏற்பாடு செய்திருந்தார்கள். ஒரு நாள் பகல் 2 மணிக்குச் சென்னையிலிருந்து புறப்பட்டேன். அன்று மாலை 5 மணிக்கெல்லாம் ஐதராபாத் போய்ச் சேர்ந்துவிட்டேன். அன்றிரவு ஐதராபாத்தில் தங்கிவிட்டு மறுநாள் காலை 7½ மணிக்குப் புறப்பட்டதும், பகல் 12½ மணிக்குப் பம்பாய் வந்துவிட்டேன். பம்பாயிலிருந்து பகல் 2 மணிக்குப் புறப்பட்டுச் சாயங்காலம் 5 மணிக்கு கராச்சியும் சேர்ந்துவிட்டேன். மறுநாள் காலை அமெரிக்காவுக்குப் புறப்படும் விமானத்தில் நானும் என்னுடனிருந்த நண்பர்களும் ஏறினோம். 25 பிரயாணிகள் உட்காரும்படியான பெரிய விமானம் அது. விமானத்தை ஓட்டும் மாலுமி, இஞ்சினியர் முதலியவர்கள் பிரயாணிகளோடு ஆறுபேர். ஏராளமான சாமான்களும் அதில் நிரம்பியிருந்தன. இவ்வளவு பாரத்தையும் எடுத்துக்கொண்டு, அதிகாலையில் 7 மணிக்குக் கராச்சியை விட்டுக் கிளம்பிற்று விமானம்.

ஆகாயத்திலே தரை மட்டத்திலிருந்து 12,000 அடிகளுக்குமேல் விமானம் கிளம்பிவிட்டது. கடலையும், மலைகளையும், பிரதேசங்களையும் தாண்டி மேக மண்டலத்திற்குமேல் விமானம் மணி ஒன்றுக்கு 225 மைலுக்கு மேலே போய்க்கொண்டிருந்தது. கராச்சியை விட்டதும், அடுத்த தங்கல், அரேபியாவின் கோடியிலுள்ள **ஏடன்** பட்டினமாகும். கராச்சியிலிருந்து இந்தப் பட்டினம் 1700 கல் தொலைவில் உள்ளது. கப்பலில் போகவேண்டுமென்றால், ஐந்து நாட்கள் ஆகும். காலையில் கராச்சியை விட்டுப் பகல் உணவிற்கு ஏடன் சேர்ந்துவிட்டோம்,

உணவை முடித்துக்கொண்டு ஏடனை விட்டுப் புறப்பட்டதும் அன்று இரவு உண்டியைக் **கார்டூன்** என்னும் பட்டினத்தில் முடித்துக்கொண்டோம். இது ஆப்பிரிக்காவின் மத்திய பாகத்திலுள்ள ஒரு முக்கிய பட்டினம்.

கார்டூன் பட்டினத்தில் இரவு உணவு முடிந்தவுடன், அங்கே இரவைக் கழிக்க நேரும் என்று நினைத்திருந்தோம். ஆனால், இராத்தங்குவது நிகழவில்லை. இரவு 9 மணிக்கே கார்டூனிலிருந்து விமானம் கிளம்பிவிட்டது. ஆகாயத்தில் பறப்பதற்குப் பகலாயிருந்தாலென்ன? இரவாயிருந்தாலென்ன? ஆகாயத்தில் விமானத்திலிருக்கிறோம். 12,000 அடிக்குக்கீழ் ஆப்பிரிக்கா கண்டத்தின் அடர்ந்த காடுகளும், விரிந்த வனாந்தரங்களும், உயர்ந்த மலைகளும் எங்குப் பார்த்தாலும் பயங்கரமான இருளும் நிறைந்திருக்க, இரவு முழுவதும் விமானம் போய்க்கொண்டே இருக்கிறது. நாங்கள் உட்கார்ந்திருந்த நாற்காலியிலேயே சிறிது சாய்ந்து கண் அயர்ந்தோம். விமானம் இருளில் போய்க்கொண்டே இருந்தது. சூரிய வெளிச்சம் தோன்றினவுடன் கீழே பார்த்தால், ஒரே வனாந்தரம்! காலை 9 மணிக்கு ஆப்பிரிக்காவின் மேல்பாகத்திலுள்ள 'ஆக்ரா' என்னும் பட்டினத்தில் விமானம் இறங்கிற்று. கார்டூனிலிருந்து -ஆக்ராவுக்கு 2300 கல் தொலைவு. இவ்வளவு தூரமும் ஒரே இரவில் கடந்தாகிவிட்டது!

ஆக்ராவை விட்டால், அதற்கு மேல்புறம் அட்லாண்டிக் கடலைத் தாண்ட வேண்டும். ஒரு கரையில் ஆப்பிரிக்காக் கண்டம். மறு கரையில் தென் அமெரிக்காக் கண்டம். அவை இரண்டிற்கும் நடுவில் 2800 மைல் ஒரே கடல் மயம்! இந்தக் கடலின் மத்தியில்

**அசென்ஷன்** என்னும் ஒரு சிறிய தீவு உண்டு. ஆக்ரா விலிருந்து அசென்ஷன் தீவுக்கு 1300 மைல். பகலில் ஆக்ராவை விட்டவுடன் கடலைத் தாண்டி, இந்தத் தீவுக்கு அன்று மாலையே வந்தாகிவிட்டது! அன்றிரவு அந்தத் தீவில் பட்டாளங்கள் இருக்கும் சிறிய குடிசை களில் நாங்களும் தங்கினோம். மறுநாள் காலை அசென்ஷன் தீவிலிருந்து புறப்பட்டுத் தென் அமெரிக்கா விலுள்ள **நெட்டால்** என்னும் பட்டினத்தைச் சேர்ந் தோம். தென் அமெரிக்காவிலிருந்து வட அமெரிக்கா வுக்கு ஒரே நாளில் பிராயணம் முடிந்துவிட்டது.

சனிக்கிழமை காலை 7 மணிக்குக் கராச்சியிலிருந்து புறப்பட்டோம். செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு அமெரிக்காவிலுள்ள 'மியாமி' என்னும் பட்டினத்தை அடைந்தோம்.

மூன்று நாளில், ஆசியாக் கண்டம், ஆப்பிரிக்காக் கண்டம், அமெரிக்காக் கண்டம் ஆகிய மூன்று கண்டங் களையும், இரண்டு பெரிய கடல்களையும் கடந்து பய ணத்தை முடித்துவிட்டோம்.

ஆகாயக் கப்பலின் மகிமையால் உலக சரித்திரமே மாறுபாட்டையும்; மனித வாழ்க்கையும், மனப்பான்மை யும் புரட்சி அடையும். இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்கா வுக்கு ஒரே நாளில் போவதானால் இந்தியர்களும் ஆப்பி ரிக்கர்களும் அண்டை வீட்டார்போல் ஆகிவிடுவார்கள்! உலக மக்கள் எல்லோரும் ஒரு நாட்டின் மக்களைப் போன்ற நிலைமைக்கு வந்துவிடுவார்கள். மக்கள் எல் லோரும் ஒரே கடவுளின் புதல்வர்கள் என்னும் தத்துவம் **விஞ்ஞானத்தின் மகிமையால் வாழ்க்கையின் உண்மை**

யாகவே ஆகிவிட்டது. இந்தப் போர் முடிந்தவுடன், உலகமெங்கும், ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஆகாய விமானங்கள் பறந்துகொண்டே யிருக்கும். உலகத்தில் ஒரு பட்டினத்திலிருந்து மற்ற எந்தப் பட்டினத்திற்குப் போகவேண்டுமென்றாலும் மூன்று நாளைக்குள் பிரயாணத்தை முடித்துவிடலாம்.

அமெரிக்காவுக்கு நான் பிரயாணம் செய்ததின் நோக்கம் ஒரு மகாநாட்டில் நாணயச் செலாவணி விஷயமாக யோசித்து முடிவு செய்வதாகும். இதன் பொருட்டு 44 நாட்டுப் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடு ஒன்று "பிரிட்டன் வுட்ஸ்" என்னுமிடத்தில் ஜுலை மாதம் முதல் தேதி கூடிற்று. உலகத்திற்குப் பொதுவான சில பொருளாதார விஷயங்களைப் பற்றி யோசித்து முடிவு செய்யும் நோக்கத்துடன் இந்த மகாநாடு அமெரிக்க ஜனாதிபதி ரூஸ்வெல்டினால் கூட்டப்பட்டது. உலகத்தின் சண்டைக்குக் காரணம் வறுமை. இந்தச் சண்டைக்குப் பின் உண்மையான சமாதானம் உலகத்தில் ஏற்படவேண்டுமென்றால், உலக மக்களின் வறுமையைப் போக்கும் வழிகளைத் தேட வேண்டும் என்ற உணர்ச்சி எல்லோருக்கும் ஏற்பட்டிருக்கிறது. வாணிபம், உழவு, கைத்தொழில் இவைதாம் பொருளாதாரத்திற்கு அடிப்படையானவை. ஒரு நாட்டில் உற்பத்தியாகும் பொருள்கள் தங்கு தடையின்றி மற்ற நாடுகளுக்குப் போகும் வசதிகள் இருந்தால்தான் எல்லா நாடுகளும் செழிப்படைந்திருக்க முடியும். சமீப காலத்தில் இவ்விதமான வர்த்தகத்திற்கு எவ்வளவோ இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தங்கள் தங்கள் நாட்டின் முன்னேற்றத்தைக் கருதி அயல்

நாட்டுச் சரக்குகள் வரக் கூடாமல் இருப்பதற்குச் சுங்கங்களையும் வரிகளையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

இவையெல்லாமல், ஒரு நாட்டிற்கும், மற்றொரு நாட்டிற்குமுள்ள நாணய மாறுதலாலும் வியாபாரத்திற்குத் தடைகள் ஏற்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் வெவ்வேறு நாணயம் உண்டு. இந்தியாவில் ரூபாய்; அமெரிக்காவில் டாலர்; இங்கிலாந்தில் ஸ்டர்லிங்; ஜெர்மனியில் மார்க்; இத்தாலியில் லீரா—இவ்விதமாக ஒவ்வொரு நாட்டிலும் நாணய வேறுபாடுகள் உண்டு. ஒரு நாணயத்திற்கும் மற்ற நாணயங்களுக்கும் நிகரான விகிதம் இருந்தால்தான் வியாபாரம் தடையில்லாமல் நடக்கும். ஒரு பவுன் என்பது நாலு டாலருக்குச் சமம், இந்த விகிதம் நிகராக நிலையாக இல்லாமல் அடிக்கடி மாறிக்கொண்டே இருந்தால் அமெரிக்காவுக்கும், இங்கிலாந்துக்கும் வர்த்தகம் நடத்துவது கடினம். வர்த்தகர்களுக்குத் தொந்தரவும் ஏற்படும். நாணய விகிதங்களை மாறாமல் நிகராக்கவும், கைத்தொழில் முன்னேற்றத்திற்கு மூலதன உதவி எளிதில் கிடைக்கும் மார்க்கத்தை உண்டாக்கவும் வேண்டிய வழிகள்தாம் இந்த மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டன.

# 4. புது உலகம்

—○❊○—

**1918ஆம்** வருடத்திலே முடிந்த அந்த உலகப் போர் நடந்துகொண்டிருந்தபோது, 'இந்தப் போருக்குப் பின்னாலே உலகம் புது உலகமாக மாறி விடப்போகிறது' என்று சொன்னார்கள். உலகில் சுதந்திரத்தையும் ஜனநாயக ஆட்சியையும் நீதியையும் நிலை நாட்டிவிடுவதாயும், இனிமேல் சண்டையையே அடியோடு ஒழித்துவிடுவதாகவும் என்னென்னவோ ஆசை வார்த்தைகளை யெல்லாம் கூறினார்கள்.

சண்டை முடிந்த பிறகு சமாதானக் கூட்டம் ஆரம்பமாகியது. எல்லா நாடுகளிலிருந்தும் அரசியல் நிபுணர்களும், மேதாவிகளும் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார்கள், பல மாதங்கள் ஆலோசனைகளும், வாதப் பிரதிவாதங்களும் நடந்தன. அமெரிக்காவிலிருந்து ஜனாதிபதி வில்சன் இந்தக் கூட்டத்திற்கு வந்திருந்தார். அவர் ஒரு மகான். உலகத்தில் சண்டை இல்லாமல் சமாதானம் நிலவ வேண்டுமானால் சர்வ தேசச் சங்கம் (League of Nations) என்னும் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டும் என்று அவர் வாதாடினார். அவருடைய எண்ணப்படியே சர்வ தேச ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. இந்த ஸ்தாபனத்தின் முக்கிய நோக்கம், உலகத்தில் சண்டையே இல்லாமல் செய்து விடுவது என்பது. உலகத்தில் உள்ள எல்லாப் பெரிய

நாடுகளும் இந்தச் சங்கத்தில் சேர்ந்தன. ஒவ்வொரு வருஷமும் சர்வதேச மகாநாடு ஒன்று கூட்டவேண்டுமென்று தீர்மானித்தார்கள். இந்த ஸ்தாபனத்தைச் சேர்ந்த தேசங்கள் ஒன்றையொன்று முறையின்றித் தாக்கிக் கொள்ளக் கூடாது என்றும், தங்களுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளையும் கருத்து வேற்றுமைகளையும் சர்வ தேச சங்கத்தின் மூலம் பஞ்சாயத்து செய்துகொள்வதென்றும், சத்திய உடன்படிக்கையைச் செய்துகொண்டன.

ஜனாதிபதி வில்சன் தம்முடைய நாட்டுக்குத் திரும்பிப் போய், தாம் செய்து வந்த பெரிய காரியத்தை அமெரிக்கருக்கு எடுத்துச் சொன்னார். அமெரிக்கரில் பெரும்பான்மையோர் சர்வ தேசச் சங்கத்தில் தங்கள் தேசம் சேரக் கூடாதெனத் தீர்மானித்து விட்டார்கள். இதைக் கண்டு ஜனாதிபதி வில்சன் மனமுடைந்து மரணமடைந்தார். அமெரிக்கா தேசம் சங்கத்தில் சேராத போதிலும் மற்ற முக்கிய தேசங்களெல்லாம் சங்கத்தில் சேர்ந்திருந்தன. ஆண்டு தோறும் சர்வதேச மகாநாடு கூட்டப்பட்டது. பெரிய பெரிய விவாதப் போர்கள் நடந்தன, விதவிதமான தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆனால், உலகம் மட்டும் புதிய உலகமாக மாறவில்லை. மகா நாடுகளாலும் தர்க்கங்களாலும் தீர்மானங்களாலும் உலகத்தை மாற்றி விடமுடியுமா? மக்களின் மனப்பான்மை அல்லவா மாறவேண்டும்? அதிலும் செல்வாக்குடைய பெரிய தேசங்களை ஆளும் மேதாவிகளின் மனப்பான்மை தூய்மை அடைய வேண்டாமா? ஆனால், இவர்களுடைய பழைய போக்கும் சுயநலப் புத்தியும்

துளிக்கூட மாறவில்லை என்பது கொஞ்ச காலத்திற்குள்ளாகவே தெரிந்து போய்விட்டது.

ஜப்பானும், சீனுவும் சர்வ தேச ஸ்தாபனத்தில் சேர்ந்தவை. இந்நாடுகள் மனமாரச் செய்துள்ள உடன்படிக்கைப்படி ஒருவரை ஒருவர் அக்கிரமமாகத் தாக்கிக் கொள்ளவே கூடாது. இப்படி இருக்க 1932 ஆம் வருடம் ஜப்பான் முறையின்றிச் சீனுவைத் தாக்கிச் சீனுவின் பெரும் பாகமாகிய மஞ்சூரியா பிரதேசத்தைக் கைப்பற்றிக்கொண்டது. சீனு தேசம் இந்த முறை தவறிய செய்கையைப் பற்றிச் சர்வதேச சங்கத்திடம் முறையிட்டது. உடன்படிக்கைப்படி இங்கிலாந்து, பிரான்ஸ், இத்தாலி முதலிய பெரிய நாடுகள் ஜப்பான் போக்கைக் கண்டித்துச் சீனுவுக்கு உதவி புரிந்திருக்க வேண்டும். ஆனுல், என்ன நடந்தது? ஜப்பான் பெரிய செல்வாக்குடைய தேசம். சீனுவுக்கு அவ்வளவு செல்வாக்கும் பலமும் இல்லை. சீனுவின் இரக்கக் குரல் காற்றில் பறந்துவிட்டது. அதன் கோரிக்கை கவனிக்கப்படவில்லை. உலகம் பழைய உலகமாகவே காட்சி அளித்தது.

மூன்று வருஷங்கள் கழிந்தன. இத்தாலி, அபிசீனியாவைத் தாக்கிற்று. அபிசீனிய மன்னன் சர்வ தேசச் சங்கத்திடம் முறையிட்டான். இத்தாலி செல்வாக்கும் பலமும் உள்ள தேசமாகையால் அபிசீனியச் சக்கரவர்த்தியின் முறையீடு பயன் பெறவில்லை. சக்கரவர்த்தி தன் நாட்டைத் துறந்து ஓடவேண்டியதாயிற்று. இத்தாலி அபிசீனிய தேசத்தை விழுங்கிவிட்டது. உலகம் பழைய உலகம்தான் என்பது இரண்டாம் முறையும் தெளிவாகிவிட்டது.

சர்வ தேச சங்கத்தின் கதி இப்படியிருக்க, ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் ஆகிய மூன்று தேசங்களும் சர்வ தேச சங்கத்தை விட்டு விலகிவிட்டன. இந்த மூன்று தேசங்களையும் ஆண்ட மேதைகள் ஒரு புதிய உலகத்தை படைக்கப்போவதாகப் பறை சாற்றினர்கள். தங்கள் வேலையையும் ஆரம்பித்தார்கள். இவர்கள் படைக்கத் தொடங்கிய புதிய உலகம் விசித்திரமான உலகம் என்று ஆரம்பத்திலேயே புலப்பட்டுவிட்டது. இவர்களுடைய புது உலகத்தில் மனிதனுக்குத் தனிப்படையான சுதந்திரம் என்பதே கிடையாது. ஒவ்வொரு மனிதனுடைய உடல், பொருள், ஆவி மூன்றும் அரசாங்கத்தைச் சேர்ந்தவை என்ற புதிய தத்துவம் தோன்றிவிட்டது, ஜெர்மனியும், இத்தாலியும், ஜப்பானும் உலகத்தையே பங்கு போட்டுக்கொண்டு ஆள வேண்டும் என்னும் முயற்சியும் தீவிரமாக ஆரம்பமாகியது. முதலாவதாக, பெரிய தேசங்கள் சிறிய தேசங்களை விழுங்க ஆரம்பித்தன. ஜப்பான் மஞ்சூரியாவை விழுங்கிவிட்டது. இத்தாலி அபிசீனியாவை ஏப்பமிட்டாய்விட்டது. ஜெர்மனியும் இந்த வேலையை ஆரம்பிக்கவேண்டாமா? ஜெக்கோஸ்லேவேகியா, ஆஸ்திரியா முதலிய சிறிய தேசங்களை ஜெர்மனி விழுங்க ஆரம்பித்தது. இந்த முறையில் வேலை வெகு எளிதாக நிறைவேறிவந்தது.

மேலும் கொஞ்சம் பெரிய தேசத்தை விழுங்கலாமென்று போலந்தில் தன் வாயை ஜெர்மனி திறந்தது. போலந்து அவ்வளவு எளிதில் பிடிபடக்கூடியதா? அது கொஞ்சம் பெரிய தேசம். இதனல் இரண்டாவது உலகப் போரும் ஆரம்பமாகிவிட்டது.

உலகப் போர், அல்லது உலக மகா யுத்தம் என்னும் பெயர் இந்த யுத்தத்திற்குத்தான் மிகப் பொருந்தும். யுத்தம் உலகம் முழுவதும் அதிக வேகமாகப் பரவியது. நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும் எங்குப் பார்த்தாலும் போர்தான்.

இந்தப் போரில் வெற்றி பெறவேண்டுமென்றால், சைன்யங்களாலும் போர்க் கருவிகளாலும், வெடிகுண்டுகளாலும் மட்டும் முடியாதென்று அமெரிக்காவிலும் இங்கிலாந்திலுமுள்ள மேதாவிகள் அறிந்து கொண்டார்கள். நியாயமும் தர்மமும் யார் பக்கம் இருக்கின்றனவோ அவர்கள்தாம் முடிவில் வெற்றி அடைவார்கள் என்று எல்லோருக்கும் தோன்றிவிட்டது. இதனால்தான் நேச நாடுகளின் தலைவர்கள் புதிய உலகத்தில் நியாயத்தை நிலை நாட்டுவதாக உலக மக்களுக்கு வாக்குறுதி தர முன்வந்தார்கள். அட்லாண்டிக் சாஸனம் போன்ற நீதி சாசனங்கள் வெளி வந்தன.

ஜனாதிபதி ரூஸ்வெல்ட் இந்த யுத்த முடிவுக்குப் பின் உலகத்தில் பசியும், பிணியும், பகையும் இல்லாமல் செய்யவேண்டிய முயற்சிகளையும் திட்டங்களையும் நிறைவேற்றப் போவதாகப் பல தடவை சொல்லிக்கொண்டிருந்தார். ரூஸ்வெல்டும் சர்ச்சிலும் 'புது உலகம், புது உலகம்' என்று பேசும்போது எந்தப் பொருளோடு பேசினார்கள் என்று சில சமயங்களில் சந்தேகம் ஏற்பட்டதுண்டு. இவர்கள் குறிப்பிடும் உலகம்—வெள்ளையர்கள் வாழும் உலகம்தானா?—இந்தச் சந்தேகம் ஏன் ஏற்படவேண்டும் என்று சிலர் கேட்கலாம். இது வரையில் உலக சரித்திரம் போன போக்கைக் கவனித்து

வந்தவர்களுக்கு இந்தச் சந்தேகம் கண்டிப்பாய்த் தோன்றும்: நாளது வரையில் உலகத்தில் பெரும்பான்மையான பாகத்தை வெள்ளையர்கள் அடக்கி ஆண்டு வந்திருக்கிறார்கள். உலக மக்களின் மொத்தத் தொகையில் வெள்ளையர் சிறுபான்மையோர். பெரும்பான்மையான மக்கள் இந்தியாவிலும் சீனவிலும் வசிக்கும் கறுப்பு நிறமும் மஞ்சள் நிறமுமே உடையவர்கள். வெள்ளையர்களுக்கு இருக்கும் எல்லா உரிமைகளும், சுதந்திரமும், சுக வாழ்வும் உலக மக்கள் எல்லோருக்கும் கிடைக்கும் வரையில், உலகத்தில் சமாதானமும் சாந்தியும் ஏற்படா. அதுவரை புது உலகமும் பிறக்காது.

# 6. கடன் கொடுத்தார் நெஞ்சம்போல்

—○✻○—

இலக்கியங்களிலிருந்து ஒரு நாட்டு மக்களின் சரித்திரம், நாகரிகம், மனப்பான்மை இவைகளை ஒரு வாறு தெரிந்து கொள்ளலாம். இராமாயணக் கதையில், தனக்கு முடிவு காலம் வந்துவிட்டதென்று தெரிந்த போது இராவணனுடைய மன நிலைமை வெகு அழகாக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. 'கடன் கொண்டார் நெஞ்சம் போலக் கலங்கினன் இலங்கை வேந்தன்' என்று இராவணனுடைய நிலைமை அறிவிக்கப்பட்டது.

இவருடைய வரிகளிலிருந்து அக்காலத்து மக்களின் மனப்பான்மை நன்றாக விளங்குகிறது. கடன்பட்டவனுடைய நெஞ்சம் எப்போதும் கலங்கிக் கொண்டிருக்கும். கடன் தீரும் வரையில் அவனுக்கு மன அமைதியே ஏற்படாது.

1944ஆம் ஆண்டில் இராமாயணக் கதையை எழுதியிருந்தால் இராவணனுடைய மன நிலைமைக்குக் கடன்பட்டவனுடைய நிலைமையைக் கவி உதாரணமாக எடுத்துக் காட்டி இருப்பாரா? இந்த வினாவிற்கு 'இல்லை' என்றே விடை ஏற்படும். இந்தக் காலத்தில் கடன்பட்டவருடைய மன நிலைமை கலங்குவதாகத் தெரியவில்லை. கடன் கொடுத்தவர்களுடைய மனம் கலக்கமடைந்து, திகிலடைந்து கிடக்கின்றது. இந்தக் காலத்துக்குப் பொருத்தமான உதாரணத்தைச் சொல்ல வேண்டுமென்றால் 'கடன் கொடுத்தார் நெஞ்சம் போல் கலங்கி

ஞன் இலங்கை வேந்தன்' என்றுதான் கூறவேண்டி யிருக்கிறது.

இந்த விதமான நினைவு எனக்கு உண்டாவதற்குக் காரணம், இப்போது நம்முடைய நாடானது இருக்கும் நிலைமையே ஆகும். எல்லா வசதிகளையும் வல்லமையையும் உடைய இங்கிலாந்து, ஏழ்மையுடைய இந்தியாவிடம் கடன்பட்டிருக்கிறது என்பது ஒரு சிலருக்குத் தெரிந்த செய்தியாகும். இங்கிலாந்து கடன்பட்ட நாடு; இந்தியா கடன் கொடுத்த நாடு. இந்த நிலைமையில் யாருடைய மனம் இப்போது கலங்கிக் கொண்டிருக்கிறது? கடன் கொடுத்தவர்களாகிய நாம் பல்லைக் காட்டிக் கும்பிட்டு மனக் கலக்கத்துடன் பயந்து பயந்து கடனைக் கேட்கும் நிலைமையில் இருக்கின்றோம்.

ஆங்கிலேயர்களுக்கு இந்த விஷயத்தில் யாதொரு கவலையும் இருப்பதாகத் தெரியவில்லை. அது மட்டுமன்று. நாம் கடனுகக் கொடுத்த தொகையை 'முறையற்ற கடன்' என்றும் கூடச் சொல்லி விட்டார்கள். இங்கிலாந்து தேசத்தின் நலத்தை அனுசரித்துத்தான் கடன் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும், நாம் அவசரப் படுவதில் பயனில்லை என்றும் சொல்லிவிட்டார்கள்.

1939ஆம் வருடம் வரையில், நாம் இங்கிலாந்துக்குக் கடன் பட்டவர்களாக இருந்தோம். சுமார் 470 கோடி ரூபாய் வரையில் நாம் இங்கிலாந்துக்குக் கொடுக்க வேண்டிய நிலையில் இருந்தோம். இந்தக் கடனை யெல்லாம் நாம் தீர்த்தாகிவிட்டது. 1944ஆம் வருடம் அக்டோபர் மாதத்தில் இங்கிலாந்து தேசம் நமக்கு 1100 கோடி ரூபாய் கொடுக்கவேண்டி யிருக்

கிறது. ஐந்து வருடங்களுக்குள் நாம் பட்ட 470 கோடி ரூபாய் கடனைத் திருப்பிக் கொடுத்ததோடல்லாமல் மேற்கொண்டு நாம் 1100 கோடி ரூபாய் கடனுகைக் கொடுத்திருக்கிறோம். 1939ஆம் வருடம் நெஞ்சு கலங்கவில்லை. இப்போதோ நம் நெஞ்சம் கலங்கித் துடிக்கின்றது.

இவ்வளவு பெரிய தொகையை நாம் இங்கிலாந்துக்குக் கடனுகக் கொடுக்க எப்படி நேர்ந்தது? சண்டைக்காக இங்கிலாந்துக்கு நாம் பலவித சாமான்களை அனுப்பியதால் ஏற்பட்ட கடன்தான் இது. சண்டை துவங்கிய நாள்முதல் இதுவரையில் நாம் சண்டைக்காக 1000 கோடி செலவழித்ததோடல்லாமல் 1500 கோடி ரூபாய்க்கு மேல் சாமான்களையும் இங்கிலாந்துக்குக் கொடுத்திருக்கிறோம்.

இந்தியாவில் பண்டங்களின் விலை உயர்ந்ததற்கும், உணவுப் பஞ்சம் ஏற்பட்டதற்கும் இது ஒரு முக்கிய காரணம். நம்முடைய சக்திக்கு மீறி நாம் சண்டையின் சுமையைத் தாங்கி வந்திருக்கிறோம். இங்கிலாந்தில் நம்மைக் காட்டிலும் எத்தனையோ கோடி ரூபாய் அதிகமாய்ச் சண்டைக்குச் செலவு செய்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். இருந்தாலும், அவரவருடைய சக்திக்குத் தகுந்தபடிதான் பாரத்தைச் சுமக்கமுடியும்.

மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாய் சம்பாதிக்கும் ஒருவன் 100 ரூபாய் செலவு செய்வது எளிதான காரியம். ஆனால், மாதம் ஒன்றுக்கு 10 ரூபாய் சம்பாதிப்பவனுக்கு ஒரு ரூபாய் செலவு செய்வது மிகவும் கடினமான காரியம். இங்கிலாந்திலே ஆள் ஒன்றுக்கு சராசரி வருஷம் ஒன்றுக்கு 1000 ரூபாய் வரும்படி வருகின்றது.

இந்தியாவிலோ ஓர் ஆளுக்கு 65 ரூபாய்தான் வருமானம் கிடைக்கிறது. இவ்வளவு வறுமை யடைந்த நாடானது சண்டைக்கு 1000 கோடி ரூபாய் செலவு செய்ததோ டல்லாமல் மேற்கொண்டு 1500 கோடி ரூபாய் பெறுமான சாமான்களும் கொடுத்து உதவியது பெரிய தியாகம் என்றுதான் சொல்லவேண்டும்.

இவ்வளவு தியாகத்தையும் செய்துவிட்டுக் கொடுத்த கடனைத் திருப்பிக் கேட்டால் மனக்கசப்பும் சங்கடமும் ஏற்படுகின்றன. இதுவரையில் நமக்கு வரவேண்டிய தொகை 1100 கோடி ரூபாய் என்று மேலே சொன்னேன். இதை எப்படி நாம் திருப்பி வாங்குவது?

ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் பணத்தைச் செலுத்தவேண்டுமென்றால் சாமான்களைக் கொடுத்துத்தான் தொகையைச் செலுத்த முடியும். உள்நாட்டுக் கடனைப்போல் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்துவதற்கு ரொக்கப் பணம் செலுத்த முடியாது. இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்கு 1100 கோடி ரூபாய் பெறுமான சாமான்கள் அனுப்பப்படவேண்டும். இவ்வளவு தொகை பெறுமான சாமான்களையும் ஒரே தடவையிலோ அல்லது ஒரே வருஷத்திலோ அனுப்பவும் முடியாது.

பிரிட்டிஷ் கவர்மெண்டுக்கும் இந்தியா கவர்மெண்டுக்கும் இந்தக் கடன் விஷயமாக ஒரு நியாயமான உடன்படிக்கை ஏற்படவேண்டும், முதலாவது, "இத்தனை வருடங்களில் கடனைத் தீர்ப்பது" என்று முடிவு செய்யப் பட வேண்டும். இரண்டாவது "இன்னின்ன விதமான சாமான்களை இங்கிலாந்து இந்தியாவுக்கு அனுப்ப வேண்டும்" என்பதும் முடிவாக வேண்டும்.

இந்தியாவில் கைத்தொழில் முன்னேற்றத்திற்குப் பெரிய தொழிற்சாலைகள் ஏற்பட வேண்டுமென்று பொது மக்களும் சர்க்காரும் திட்டங்கள் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள், இதற்கு வேண்டிய இயந்திரங்கள் முதலான சாமான்களை அனுப்புவதற்குப் பிரிட்டிஷ் கவர்மெண்டார் ஒப்புக்கொள்ள வேண்டும்.

இந்தக் கடன் விஷயமாக அமெரிக்காவில் நடந்த சர்வதேச மகாநாட்டில், என்னுடைய தோழர்களும் நானும் வாதாட நேரிட்டது. இது விஷயமாகக் கூடிப் பேசுவதற்குத் தனியான ஏற்பாடு கூடிய சீக்கிரம் செய்வதாகப் பிரிட்டிஷ் கவர்மெண்டின் பிரதிநிதிகள் வாக்களித்திருக்கிறார்கள்.

இந்தியாவின் பிரதிநிதிகளும் இங்கிலாந்தின் பிரதிநிதிகளும் கூடிய சீக்கிரம் இந்தப் பேச்சைத் தொடங்குவார்களென்று எல்லோரும் எதிர்பார்க்கிறார்கள். இந்தக் காரியத்தைப் பற்றி ஆலோசிக்கும் போதெல்லாம் ' முள்ளின் மேல் சேலையை உலர்த்தினால் மெல்லத்தான் எடுக்க வேண்டும் ' என்னும் பழமொழி என் நினைவுக்கு வருகின்றது.

# 7. முன்னேற்றத் திட்டம்

—○❋○—

சிலப்பதிகாரம் என்னும் தமிழ்க் காவியத்தில் காவிரிப்பூம்பட்டினத்தில் இந்திரவிழா நடைபெற்ற விவரம் மிகவும் அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. இவ்விழாவில் அந்த நகரிலுள்ள மக்கள், தங்கள் அரசனை வாழ்த்தும் போது,

> **"பெருநில மன்னன் இருநிலம் அடங்கலும்**
> **பசியும், பிணியும், பகையும் நீங்கி**
> **வசியும் வளனும் சுரக்கென வாழ்த்திக்"**

கொண்டாடினார்கள். இதன் பொருள், "எங்கள் அரசனுடைய பெரிய நாடு முழுவதும் பசியும், நோயும், பகையும் நீங்கி, மழையும் வளமும் சுரக்கவேண்டும்" என்பது. ஒரு நாட்டின் பெருமைக்கும் நன்மைக்கும் வேண்டியவை இன்னவென்பதை 2000 வருஷங்களுக்கு முன்னிருந்த தமிழ் மக்கள், நன்றாக அறிந்திருந்தார்கள். எல்லா விதமான நாகரிகத்திலும் முன்னேற்றமடைந்த மேல் நாட்டார் இதே உண்மையை இப்பொழுதுங்கூட வற்புறுத்திச் சொல்லுகிறார்கள். இப்பொழுது நடக்கும் பெரிய போருக்குப்பின், உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் பசியும், பிணியும், பகையும் இல்லாமல் வாழும் வழியை நிலைநாட்டப் போவதாக மேல்நாட்டுப் பெரியோர்கள் வாக்களித்திருக்கிறார்கள். அட்லாண்டிக் சாசனம் என்று சொல்லப்படும் வெளியீட்டின் முக்கிய கருத்தும் இதுவே.

**பசியையும் நோயையும் பகையையும் நீக்குவோம்**

என்று சொன்னால் மட்டும் போதாது என்றுணர்ந்து, எல்லா நாடுகளிலும் இதன் பொருட்டுத் திட்டங்கள் வகுக்க ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த நோக்கத்துடன் திட்டங்கள் தயாரிப்பதற்கு நம்முடைய அரசாங்கத்தாரும் பல ஆலோசனைக் குழுக்களை நியமித்திருக்கிறார்கள். ஒரு நாட்டிலுள்ள ஒவ்வொரு மனிதனும் பசியாலும் நோயாலும் வருந்தாமலிருக்கச் செய்ய வேண்டுமென்பதே இந்தத் திட்டங்களின் அடிப்படையான நோக்கமாகும்.

நம்முடைய நாட்டு மக்களின் இக்கால நிலைமை எப்படி யிருக்கிறது என்பதை ஆராய்ந்து பார்ப்போம். நம்முடைய நாட்டில் சுமார் 40 கோடி மக்கள் வசிக்கிறார்கள். ஒரு மனிதனுடைய சராசரி வருமானம் வருஷம் ஒன்றுக்கு 65 ரூ. என்று பொருளாதார நிபுணர்கள் கணக்கெடுத்திருக்கிறார்கள். நம் மக்களின் . வறுமை நிலை இன்னதென்று அறிய வேண்டுமானால், மற்ற நாடுகளில் உள்ள நிலைமையை நாம் அறிய வேண்டும். அமெரிக்கா தேசத்தில் சராசரி ஒரு மனிதனுக்கு வருஷம் ஒன்றுக்கு 1400 ரூ. வரும்படி. கனடா தேசத்தில் 1030 ரூ. இங்கிலாந்தில், 980 ரூ. ஆஸ்திரேலியாவில் 800 ரூ. ஜெர்மனியில் 600 ரூ. ஜப்பானில் 200 ரூ. இப்படி ஆராய்ந்து பார்க்கும்போதுதான் நம் நாட்டு மக்களின் வறுமையின் கொடுமை எவ்வளவென்பது வெளிப்படும். ஒவ்வொரு மனிதனுக்கும் வருஷ மொன்றுக்கு 65 ரூ. வரும்படி வருகிறதே என்று நினைத்துவிடக் கூடாது. 65 ரூ. என்பது ஒரு சராசரிக் கணக்கு. அதாவது இந்தச் சொற்ப வரும்படியும் இல்லாத எவ்வளவோ லட்சக் கணக்கான மக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள்.

எனவே, நாம் ஏற்படுத்தும் திட்டங்களில், ஒவ்வொரு வருடைய வருமானத்தையும் உயர்த்துவதற்கு வழி தேட வேண்டும்.

மனிதனுடைய வாழ்க்கையில் முதன்மையான தேவைகள் **உணவும் உடையும்**. இந்தியாவில் ஒரு மனிதன், தன்னுடைய உடல் வலிவு குறையாமல் சிறிது சத்தான உணவை உண்பதற்கு வருஷம் ஒன்றுக்குக் குறைந்தது 65 ரூ. வேண்டுமென்று உணவு ஆராய்ச்சி நிபுணர் ஒருவர் கணக்கெடுத்திருக்கிறார். இந்தக் கணக்கின்படி, நம் நாட்டு மக்களுக்கு உணவுக்கு மட்டும் நாம் வருஷமொன்றுக்கு 2600 கோடி ரூ. வருமானம் வரும் வழியைத் தேடவேண்டும். இங்கே சொல்லப்பட்ட 65 ரூபாய், 1938ஆம் வருஷம் இருந்த விலைகளைத் தழுவிக் கணக்கிடப்பட்டது. இப்போதிருக்கும் விலைகளின்படி கூறவேண்டுமானால் இந்தத் தொகை, குறைந்தது இரண்டு மடங்கு அதிகமாகும். இந்தக் கணக்கில் உடல் வலிமை குறையாமலிருக்கக் குறைந்தது எவ்வளவு உணவு வேண்டுமோ அது மட்டும்தான் கணக்கு எடுக்கப்பட்டிருக்கிறது. வாய்க்கு ருசியான உணவுகளும், சுக வாழ்வுக்கு வேண்டிய உணவுகளும் இந்தக் கணக்கில் வரவில்லை. இவற்றையெல்லாம் கணக்கெடுத்தால், நாட்டில் வரும்படி இன்னும் அதிகமாக வேண்டும் என்பது புலப்படும்.

மனித வாழ்க்கைக்கு இரண்டாவது தேவையான **உடையை** எடுத்துக் கொள்வோம். நம்முடைய நாட்டிற்குப் பெரும்பான்மையும் பருத்தி நூலின் ஆடைகளே தேவை. இந்தியாவில் செலவாகும் நூலாடையின் **கணக்கைப்** பார்க்கும்போது, ஆள் ஒன்றுக்கு ஒரு

வருஷத்தில் 16 கெஜம் துணிதான் உபயோகப்படுத்தப் படுகிறது என்பது தெரிய வருகிறது. இதுவும், சராசரிக் கணக்கு என்பதை மறந்துவிடக் கூடாது. வருஷம் ஒன்றுக்கு ஒரு கெஜம் துணியுமில்லாமல், எவ்வளவோ லட்சக் கணக்கான மக்கள் நம் நாட்டில் இருக்கிறார்கள். உலகத்திலுள்ள மற்றச் சில நாடுகளில் ஆள் ஒன்றுக்குச் சராசரி எவ்வளவு நூல்துணி செலவாகிறது என்னும் கணக்கைப் பார்ப்போம்.

அமெரிக்கா 64 கெஜம், கானடா 38 கெஜம், ஜெர்மனி 34 கெஜம், மலாயா 30 கெஜம், ஜப்பான் 22 கெஜம்,

இந்தக் கணக்கைப் பார்க்கும்போது, இந்த நாடுகளில், மேற்குறித்த நூல் துணிகள் அல்லாமல், கம்பளித் துணிகளையும் அந்நாட்டு மக்கள் பயன்படுத்துகிறார்கள் என்பதை நாம் நினைவில் வைக்க வேண்டும். இந்தியாவில். ஆள் ஒன்றுக்கு வருஷத்திற்கு 30 கெஜம் துணியாவது கட்டாயம் வேண்டும். இந்தக் கணக்கின்படி நம் நாட்டில் வருஷம் ஒன்றுக்கு 1200 கோடி கெஜம் நூல் துணியை நாம் உற்பத்தி செய்யவேண்டும். இந்தத் துணிக்குக் கெஜம் ஒன்றுக்குச் சராசரி 4 அணா என்று விலை வைத்தால், 300 கோடி ரூபாய் பெறுமான நூல் துணியை நாம் உற்பத்தி செய்யவேண்டும்.

இனிச் **சுகாதார** நிலையைப் பற்றிக் கவனிப்போம். போதுமான சுகாதார வசதிகள் இல்லாமையால், நம் நாட்டு மக்களின் ஆயுளே குறைந்து விடுகின்றது. சராசரி ஆயுள் கணக்கை எடுத்துப் பார்க்கும்போது நம்முடைய நாட்டு மக்களின் சராசரி வயது 27 என்பது

தெரியவருகிறது. ஆனால் வேற்று நாடுகளாகிய ஆஸ்திரேலியாவில் 63 வயதும், அமெரிக்காவில் 60 வயதும், இங்கிலாந்தில் 60 வயதும், ஜெர்மனியில் 59 வயதும், கானடாவில் 58 வயதும், ஜப்பானில் 47 வயதும் அவ்வந்நாட்டு மக்களின் சராசரி வயது என்பது தெரியவருகிறது.

இந்தக் கணக்கைப் பார்க்கும்போது, நம் நாட்டு மக்கள் எவ்வளவு அற்ப ஆயுள் உள்ளவர்களாக இருக்கிறார்கள் என்பது தெரிகிறது அல்லவா? தாய்மார்களுக்குப் போதுமான உணவும் சுகாதார வசதியும் இல்லாமலும், குழந்தைகளுக்குப் போதுமான பால் இல்லாமலும் நம்முடைய நாட்டில் பிறக்கும் குழந்தைகள் ஒவ்வொரு ஆயிரத்திலும் 167 குழந்தைகள் ஒரு வயதாவதற்குமுன் இறந்துவிடுகின்றன.

மக்கள் நோயில்லாமல் வாழ்வதற்குப் போதுமான மருத்துவ சாலைகளும், மருத்துவர்களும் நம்நாட்டில் இல்லை. பிரிட்டிஷ் இந்தியாவின் கணக்கைமட்டும் பார்த்தால், 7400 வைத்திய சாலைகள் இருக்கின்றன. இதைச் சராசரிக் கணக்காகப் பார்க்கும்போது, 41,000 ஜனங்களுக்கு ஒரு வைத்தியசாலைதான் இருக்கிறது. இந்தியா முழுவதிலும் 42000 வைத்தியர்களும் 4500 மருத்துவ மாதர்களும்தாம் இருக்கிறார்கள். இதையும் சராசரியாகக் கணக்கிட்டுப் பார்க்கும்போது, சுமார் 9000 ஆட்களுக்கு ஒரு வைத்திய(டாக்ட)ரும் 86,000 ஆட்களுக்கு ஒரு மருத்துவப் பணிப்பெண் (நர்ஸ்)ணும் நம் நாட்டில் இருக்கிறார்கள். இங்கிலாந்தின் கணக்கைப் பார்க்கும்போது சராசரி 770 ஆட்களுக்கு ஒரு வைத்தியரும், 435 ஆட்களுக்கு ஒரு மருத்துவமாதும் இருக்கிறார்கள். நம்முடைய நாட்

டில் ஒவ்வொரு கிராமத்திலும், ஒரு சிறிய வைத்தியசாலை யும், ஒவ்வொரு பட்டினத்திலும் ஒரு பெரிய வைத்திய சாலையுமாவது இருக்க வேண்டியது இன்றியமையாதது. பிரசவ வைத்திய சாலைகள் மிகவும் அவசியம். 1939ஆம் வருடம் 2 லட்சம் பெண்கள் கருஉயிர்க்கும் காலத்து இறந்துவிட்டார்கள். சரியான பிரசவ ஆஸ்பத் திரிகள் இருந்திருந்தால், இவர்களில் நூற்றுக்கு 75 பேரா வது பிழைத்திருப்பார்கள் என்பதில் சந்தேகமே இல்லை.

நாகரிகமடைந்த ஒரு நாட்டின் மக்களுக்கு உணவும் உடையும் சுகாதார வசதியும் இருந்தால் மட்டும் போதா. கல்வியும் வேண்டும். மேல்நாடுகளில் 5 வய துக்கு மேற்பட்ட மக்களில் 100க்கு 80 பேர் எழுதவும் படிக்கவும் தெரிந்திருக்கிறார்கள். இந்தியாவிலோ 100க்கு 15 பேருக்குத்தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். முன் னேற்றமடைந்த எல்லா நாடுகளிலும் ஒவ்வோர் ஆணுக் கும் பெண்ணுக்கும் இலவசமாகவும் கட்டாயமாகவும் அரசாங்கத்தாருடைய பணச் செலவில், கல்வி பயிற்று கிறார்கள். நாம் ஏற்படுத்தும் திட்டத்திலும் கட்டாய இலவசப் படிப்பிற்குப் போதுமான பொருள் கிடைக்கும் வழியைக் காட்ட வேண்டும்.

இதுவரை கூறிக்கொண்டுவந்தபடி இந்தியாவி லுள்ள ஒவ்வொரு மனிதனுக்கும் குறைந்த அளவில், உணவும், உடையும், சுகாதார வசதியும், கல்வியும் இருக்கவேண்டுமென்றால், நம்முடைய நாட்டில் வருஷ மொன்றுக்கு 3000 கோடி ரூபாயாவது வருமானம் வரக் கூடிய முறைகளைத் தேடவேண்டும், ஆனால், நாகரிக மடைந்த ஒரு நாட்டிற்கு இது போதும் என்று சொல்ல முடியாது. குறைந்த பட்சம், வருடம் ஒன்றுக்கு நம்

நாட்டில் 6500 கோடி ரூபாய் வருமானம் உண்டாகும்படி செய்தால்தான், நம் நாட்டு மக்களும் நாகரிகமாக வாழ முடியும். இவ்வளவு பெரிய வருமானத்தைப் பதினைந்து வருஷங்களில் எப்படி அடையலாமென்பதுபற்றிப் பம்பாயிலுள்ள சில பொருளாதார நிபுணர்கள் சமீபத்தில் ஒரு திட்டத்தை வெளியிட்டிருக்கிறார்கள்.

நம்முடைய நாட்டின் செல்வத்தையும், வருமானத்தையும் அதிகப்படுத்துவதற்கு மூன்று முக்கிய துறைகளில் சீர்திருத்தமும் அபிவிருத்தியும் செய்ய வேண்டும். அவையே (1) விவசாயச் சீர்திருத்தம் (2) கைத்தொழில் அபிவிருத்தி (3) போக்கு வரவு வசதிகளை அதிகப்படுத்துதல் என்பன.

விவசாயமே நம் நாட்டின் முக்கிய தொழில். இந்தியாவில் ஏழு லட்சம் கிராமங்கள் இருக்கின்றன. ஜனத்தொகையில், 100க்கு 90 பேர் கிராமவாசிகள். 100க்கு 72 பேர் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள். மற்ற நாடுகளின் விவசாய நிலையைப் பார்க்கும்போது, நம் நாட்டில் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிறவர்கள் மிகவும் அதிகமாவர். சரியான விவசாய முறைகளை நாமும் கையாண்டால், இவ்வளவு பேர்கள் விவசாயத்தில் ஈடுபட வேண்டிய அவசியமில்லை. இவ்வளவு மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தும், நம்முடைய விவசாய நிலையானது, பிற்போக்காகவே காணப்படுகிறது. இந்தியாவில் ஏகரா ஒன்றுக்குச் சராசரி 56 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்களே உற்பத்தியாகின்றன. இங்கிலாந்தில் ஏகரா ஒன்றுக்குச் சராசரி 225 ரூபாய் பெறுமானமுள்ள பொருள்கள்உண்டாகின்றன. சில விவசாயப் பொருள்களை உதாரணமாக எடுத்துக்

கொண்டு, இந்தியாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் எவ்வளவு வேறுபாடு இருக்கிறதென்பதைப் பார்ப்போம்:

தானியங்களை எடுத்துக்கொண்டால், நம் நாட்டில் ஏகரா ஒன்றுக்கு 690 ராத்தல் எடையுள்ள தானியங்களே சராசரி விளைகின்றன. இங்கிலாந்திலோ ஏகரா ஒன்றுக்கு 2000 ராத்தல் தானியங்கள் விளைகின்றன. நம் நாட்டில் ஏகரா ஒன்றுக்குச் சராசரி 10 டன் கரும்பு உற்பத்தியாகின்றது. ஜாவா என்னும் தீவில் 40 டன் கரும்பு உற்பத்தியாகின்றது. இந்தியாவில் ஏகரா ஒன்றுக்குச் சராசரி 98 ராத்தல் பஞ்சு விளைகிறது. அமெரிக்காவில் 200 ராத்தல் எடைப் பஞ்சும், எகிப்து தேசத்தில் 450 ராத்தல் எடைப் பஞ்சும் ஒரு ஏகராவில் உற்பத்தியாகின்றது. இவ்வளவு பிற்போக்காக நம்முடைய விவசாயம் இருக்கவேண்டிய அவசியமேயில்லை. தண்ணீர்ப் பாய்ச்சல் வசதிகளையும், சரியான முறையில் எரு இடும் முறைகளையும் கவனித்து வந்தால், நம்முடைய நிலத்தின் வேளாண்மையும் மற்ற நாடுகளைப்போல் அதிகமாகும் என்பதில் சந்தேகமில்லை.

பிரிட்டிஷ் இந்தியாவில், 21 கோடி ஏகரா நிலங்கள் உழுது பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் 5½ கோடி ஏகரா நிலங்களுக்குத்தான் தண்ணீர்ப் பாய்ச்சல் வசதி இருக்கிறது. 15½ கோடி ஏகரா நிலங்கள் மழையைத்தான் எதிர்பார்க்க வேண்டும். நம் நாட்டில் நீர்வளத்திற்குக் குறைவில்லை. எல்லாக் காலத்திலும் தண்ணீர் நிறைந்து ஓடும் பெரிய பெரிய ஆறுகள் ஏராளமாயிருக்கின்றன. இந்த ஆறுகளின் வெள்ளமெல்லாம் சமுத்திரத்தில் போய், யாதொரு பயனுமில்லாமல்

விழுகின்றன. ஆறுகளில் அணைகளைக் கட்டித் தண்ணீரைத் தேக்கி வாய்க்காலின் வழியாக நிலங்களுக்குக் கொண்டுபோக வேண்டும். அணைக்கட்டுகள், வாய்க்கால்கள் ஆகிய இவற்றின் பொருட்டுச் சர்க்கார் இது வரையில் 154 கோடி ரூபாய் செலவு செய்திருக்கிறது. இன்னும் 300 கோடி ரூபாயைச் செலவு செய்தால், சுமார் 12 கோடி ஏகரா நிலங்களுக்கு நீர்ப்பாய்ச்சல் வசதிகளை உண்டாக்கலாம். இந்த வசதியைச் செய்தால் வேளாண்மை எவ்வளவு அதிகப்படும் என்பது எளிதில் தெரியவரும். நிலங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சல் வசதிகளைச் செய்து கொடுப்பது நாட்டை யாளும் அரசனுடைய முதன்மையான கடமை என்னும் கருத்து, சங்க நூலாகிய புறநானூற்றில் உள்ள ஒரு செய்யுளில் வெகு அழகாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

**வித்துவான நோக்கும்**
**புன்புலம், கண்அகன்**
**வைப்பிற் றாயினும்,**
**நண்ணி ஆளும்**
**இறைவன் தாட்குஉத**
**வாதே ; அதனால்,**
**அடுபோர்ச் செழிய!**
**இகழாது, வல்லே**
**நிலம்நெளி மருங்கின்**
**நீர்நிலை பெருகத்**
**தட்டோர் அம்ம**
**இவண் தட்டோரே,**
**தள்ளாதோர் இவண்**
**தள்ளா தோரே.**

—ஒரு புலவர், பாண்டியன் நெடுஞ்செழியனைப் பார்த்துச் சொல்வது இப்பாட்டு. "வேளாண்மைக்கு

மழையையே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் நிலங்கள், எவ்வளவு பரந்து விரிந்திருந்த போதிலும், அவை அரசனுக்கு ஒரு வழியிலும் உதவா. நிலத்தில் பள்ளமாக இருக்கும் இடங்களிலெல்லாம் கரைகளைக் கட்டித் தண்ணீரைத் தேக்கி வைத்த அரசர்களே இந்த நிலவுலகத்தில், தம் பெயரை நிலைநாட்டலாம். அப்படிச் செய்யாதவர் உலகில் தம் புகழை நிலைநாட்ட முடியாது!" என்பது இப்பாட்டின் கருத்து.

போதுமான எரு இடாமல் இருப்பது நம்முடைய விவசாய முறையிலுள்ள ஒரு முக்கியமான குற்றம். சரியாக எரு வைப்பதில் எவ்வளவு வேறுபாட்டைக் காணலாம் என்பதைப் பற்றி ஓர் உதாரணம் தருகிறேன். பருத்தி விளைவில் விவசாய இலாகாவைச் சேர்ந்தவர்கள் கொஞ்ச காலத்திற்குமுன் ஒரு பரீட்சை செய்து பார்த்தார்கள், கொஞ்சமும் எருவில்லாமல் பருத்தி வேளாண்மை செய்யப்பட்ட ஒரு ஏகரா நிலத்தில் 50 ராத்தல் பஞ்சு உற்பத்தியாயிற்று. அடுத்த வருஷத்தில், அதே நிலத்தில் 4 டன் எடையுள்ள சாணத்தை எருவாகப் போட்டதனுல், 80 ராத்தல் பஞ்சு விளைந்தது. பின்னும் அதே நிலத்தில் சோடா முதலிய உயர்தர எருக்களைப் போட்டதனுல், 200 ராத்தல் எடை பஞ்சு விளைந்தது. என்ன மாறுதல்! சரியான எருவினுல் பருத்தி வேளாண்மை 4 மடங்கு அதிகமாயிற்று. எருவின் அவசியத்தை நம்மவர்கள் உணர்ந்திருக்கிறுர்கள் என்பதில் சந்தேகமில்லை. "ஏரினும் நன்றும் எருவிடுதல்" என்று 2000 வருஷத்திற்குமுன் எழுதப்பட்ட குறளில் சொல்லப்பட்டிருக்கிறது. "உரம் உதவுவது போல உறவினரும் உதவமாட்டார்" என்ற பழமொழியுங்கூட,

உண்டு. ஆனால், வழக்கத்தில் நாம் இவ்வுண்மையைக் கண்டு பிடிப்பதில்லை. வேளாண்மையிலிருந்து இப்போது நம் நாட்டில் சுமார் 1200 கோடி ரூபாய் பெறுமானமுள்ள விளைபொருள்கள் உண்டாகின்றன. மேற்குறித்தபடி தண்ணீர்ப் பாய்ச்சல் வசதிகளை அதிகப்படுத்திப் போதுமான எருக்களையும் இட்டால், 15 வருடங்களுக்குள் சுமார் 2,700 கோடி ரூபா பெறுமான விளைபொருள்களை நாம் உண்டாக்கக்கூடும்.

நம்முடைய முன்னேற்றத் திட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்திக்கும் முதன்மையான இடம் கொடுக்கவேண்டும். விவசாயத்தை நாம் எவ்வளவு அபிவிருத்தி செய்தபோதிலும், கைத்தொழில் முன்னேற்றத்தால்தான், எல்லா மக்களுக்கும் போதுமான உணவும் உடையும் சுகாதாரமும் கல்வியும் கொடுக்க முடியும். சென்ற 25 வருஷங்களில் நம் நாட்டின் கைத்தொழில்கள் எவ்வளவோ அதிகப்பட்டிருந்தபோதிலும், மேல் நாடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நாம் இன்னும் பிற்போக்கானவர் என்றே சொல்லவேண்டும். கைத்தொழில்களுக்கு வேண்டிய மூலப் பொருள்களும், சாதனங்களும் நம் நாட்டில் ஏராளமாயிருக்கின்றன. தொழில் செய்வதற்குக் கோடிக் கணக்கான மக்களும் இருக்கிறார்கள். இவை இரண்டையும் நாம் இன்னும் சரியாக உபயோகப்படுத்திக்கொள்ளவில்லை.

இக்கால இயந்திரக் கைத்தொழில்களுக்கு இரும்பும் நிலக்கரியும் முக்கியமாக வேண்டிய மூலப்பொருள்கள். இவையிரண்டும் நம் நாட்டில் ஏராளமாயிருக்கின்றன. 300 கோடி டன் எடையுள்ள இரும்பும் 6,000 கோடி

டன் எடையுள்ள நிலக்கரியும் இந்தியாவில் இருக்கின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். ஆனால், இவைகள் நிலத்தில் கீழே புதைந்து கிடக்கின்றன. இவற்றை வெளியே எடுக்கவும் வேண்டும்; எடுத்து நம் நாட்டில் உபயோகிக்கவும் வேண்டும். இப்போது நாம் வருஷம் ஒன்றுக்கு 3 கோடி டன் எடையுள்ள நிலக்கரியைத்தான் தோண்டி எடுக்கிறோம். அமெரிக்காவில் வருஷமொன்றுக்கு 45 கோடி டன் நிலக்கரி தோண்டியெடுக்கப்படுகிறது. இங்கிலாந்தில், 30 கோடி டன் எடுக்கப்படுகிறது. இக்கால மனித வாழ்க்கைக்கு இரும்பும் நிலக்கரியும், தங்கம் வெள்ளி இவைகளைவிட மிக மேன்மையான செல்வம். நம் நாட்டில் புதைந்து கிடக்கும் இவ்வளவு பெரும் செல்வத்தை நாம் சரியாகப் பயன்படுத்தாமல் வைத்திருக்கிறோம்.

கைத்தொழிலுக்கு வேண்டிய இயந்திரங்களைப் பெரும்பான்மையும் இப்போது வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டியிருக்கின்றது. மின்சார சக்தியை உண்டு பண்ணும் இயந்திரங்களையும், நூல், துணி, சர்க்கரை, சிமென்ட், காகிதம், கண்ணாடி, தோல் சாமான்கள் முதலிய எல்லாப் பொருள்களையும் செய்வதற்கான இயந்திரங்களையும் நம் நாட்டிலேயே செய்யமுடியும். இவ்வித இயந்திரங்களை நம் நாட்டிலேயே செய்தால்தான் கைத்தொழில் முன்னேற்ற மடையும். இவைகளைச் செய்வதற்கு முக்கியமாக வேண்டிய இரும்பும் நிலக்கரியும் நம் நாட்டில் ஏராளமாக இருக்கின்றன என்று நாம் தெரிந்திருக்கிறோம். இவைகளேயல்லாமல், ரயில்வே இன்சின்கள், ரயில் வண்டிகள், கப்பல்கள், மோட்டார், ஆகாய விமானம் இவைகளை எல்லாம் நம் நாட்டில் செய்வதற்

குப் போதுமான மூலப்பொருள்கள் இருக்கின்றன. தொழில் செய்வதற்குக் கோடிக்கணக்கான மக்கள் இருந்த போதிலும், விஞ்ஞானம் கைத்தொழில் இவைகளில் பயிற்சிபெற்ற எஞ்சினியர்கள், தொழிற்கலை பயின்றவர் கள் ஆயிரக் கணக்காக வேண்டும். தொடக்கத்தில் இவர்களில் சிலரை வெளிநாடுகளிலிருந்து வரவழைப்பதில் தவறு இல்லை. ஆனால், நம்நாட்டு மக்களும் இப்பயிற்சி களை அடைவதற்கு வேண்டிய கலாசாலைகளை ஏற்படுத் துவதுடன், வெளிநாடுகளுக்கும் நம்மக்களில் அனே கரை அனுப்ப வேண்டும். சென்ற 5 வருஷங்களில் சண்டைக்கு வேண்டிய சாமான்களை நாட்டில் செய்வ தால், நம் நாட்டு மக்களில் 10,000 பேருக்குமேல் தொழிற் கலைகளில் தேர்ச்சியடைந்திருக்கிறார்கள். இன் னும் எவ்வளவோ ஆயிரம் மக்களை இந்தத் துறையில் தேர்ச்சி அடையும்படி செய்யலாம்.

கைத்தொழில் முன்னேற்றத்திற்கு இன்றியமையாது வேண்டியவைகளில் மற்றொன்று மின்சார சக்தி ; மலை களிலிருந்து விழும் தண்ணீரின் வேகத்தால், மின்சார சக்தியை எளிதில் உண்டாக்கலாம். உயர்ந்த மலைகளும் பெரிய ஆறுகளும் நிறைந்த நம்நாட்டில் இதற்குவேண் டிய வசதிகள் ஏராளமாக இருக்கின்றன. மின்சார சக் தியை அளவெடுப்பதற்குக் " கிலோ வாட் " என்ற ஓர் அளவை சொல்லப்படுவதுண்டு. நம்நாட்டில் மூன்று கோடி " கிலோ வாட் " அளவுள்ள மின்சார சக்தியை உண்டாக்குவதற்கு வசதிகள் இருக்கின்றன என்று கணக்கெடுத்திருக்கிறார்கள். இதுவரையில் 5 லட்சம் " கிலோ வாட் " அளவுள்ள மின்சார சக்தியைத்தான் நம்நாட்டில் உண்டாக்கியிருக்கிறோம். அதாவது, நாட்

டில் இருக்கும் வசதியில் அறுபதில் ஒருபங்கைத்தான் நாம் இப்போது உபயோகிக்கிறோம். இது ஏராளமான பணத்தைப் பெட்டியில் வைத்துக்கொண்டு, அதை உபயோகிக்காமல், வறுமையான நிலைமையில் இருப்ப தற்கு ஒப்பாகும் பூமியிலும், மலைகளிலும், ஆறு களிலும் நிறைந்து கிடக்கும் மகத்தான சக்தியை நாம் உபயோகிக்காமல் காலம் கழித்து வருகிறோம். மின்சார சக்தியினால்தான், தொழிற்சாலையிலுள்ள இயந்திரங்கள் ஓடுகின்றன. நீலகிரி மலையிலுள்ள பைக்காரா ஆற்றி லிருந்து உண்டாக்கப்படும் மின்சார சக்தி கிடைத்த வுடன், கோயமுத்தூர் ஜில்லாவில், எவ்வளவு நூல் தொழிற்சாலைகள் புதியனவாக ஏற்பட்டன என்பதை நாம் கண்கூடாகப் பார்க்கிறோம் அல்லவா ? நாட்டில் எங்கும் இதே விதமாக மின்சார சக்தி கிடைக்குமானால், ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் ஏற்படும் என்பதில் சந்தேகமில்லை.

வருஷமொன்றுக்கு 400 கோடி ரூபாய் பெறுமான பண்டங்கள்தாம், நம் நாட்டின் தொழிற்சாலைகளில் செய்யப்படுகின்றன. சரியான முறையில் திட்டத்தை ஏற்படுத்தினால், 15 வருஷங்களில், வருஷமொன்றுக்கு 2,400 கோடி ரூபாய் பெறுமான பண்டங்களை நம் நாட்டிலேயே செய்யலாம். இது கைகூட வேண்டு மானால், 5000 கோடி ரூபாய் மூலதனம் வேண்டியிருக் கும்.

விவசாயத்தையும் கைத்தொழிலையையும் அபிவிருத்தி செய்யும்போது, போக்கு வரவுக்கு வேண்டிய வண்டிப் பாதைகள், ரயில் பாதைகள்—இவைகளையும் அதிகப் படுத்தவேண்டும். இந்தியாவில் இப்போது 41,000

மைல் ரயில்பாதை இருக்கிறது. நம் நாட்டின் பரப்பையும்? ஜனத்தொகையையும் பார்க்கும்போது, இது போதுமானதன்று. நம்முடைய நாட்டின் பரப்பையுடைய ஐரோப்பிய தேசங்களில் 2 லட்சம் மைல் ரயில் பாதை இருக்கிறது. 15 வருஷங்களுள் இன்னும் 20,000 மைல் ரயில் பாதையாவது நாம் அமைக்கவேண்டும். ரயில்வேயில் இதுவரையில் 850 கோடி ரூபாய் நாம் செலவு செய்திருக்கிறோம். இன்னும் 20,000 மைல் அதிகப்படுத்த வேண்டுமென்றால், ஏறக்குறைய 430 கோடி ரூபாய் வேண்டியிருக்கும்.

இனி வண்டிப் பாதைகளின் நிலைமையைப் பார்ப்போம். சுமார் 3 லட்சம் மைல் நீலமுள்ள வண்டிப் பாதைகள் நாட்டில் இப்போது இருக்கின்றன. இவற்றில் 75,000 மைல் பாதைகளுக்குத்தான் கல் பரப்பப் பட்டிருக்கிறது. மீதியுள்ள $2\frac{1}{4}$ லட்சம் மைல் நீலமுள்ள பாதைகள், மண்பாதைகள். அநேக கிராமங்களில் மண் பாதைகளும் கூட இல்லை. நம் முன்னேற்றத் திட்டத்தில், கல் பரப்பப்பட்ட வண்டிப் பாதைகளை அதிகப் படுத்த ஏற்பாடு செய்வது அவசியம். இன்னும் 3 லட்சம் மைல் பாதைகளுக்குக் கல் பரப்பினால்தான் சுமாரான போக்கு வரவு வசதி நம் மக்களுக்குக் கிடைக்கும். இந்த வகையில், ஏறக்குறைய 300 கோடி ரூபாய் செலவாகும்.

வருஷமொன்றுக்கு நம் நாட்டில் குறைந்தது, 6500 கோடி ரூபாய் வருமானம் உண்டாகும்படி செய்தால் தான் நாட்டு மக்கள் கொஞ்சமாவது சுகவாழ்வில் வாழலாமென்று மேலே குறிப்பிட்டேன். இப்போது நம் நாட்டின் வருஷ வருமானம் ஏறக்குறைய 2200 கோடி ரூபாய்தான். 15 வருடங்களுக்குள் நாட்டின்

வருமானத்தை 3 மடங்காக ஆக்க வேண்டும். "இவ்வளவு கோடிக்கணக்கான பணமும் நமக்கு எப்படிக் கிடைக்கும்?" என்று மலைக்க வேண்டிய அவசியமில்லை. ருஷியா தேசமானது நம்மைப்போல், எல்லாத் துறைகளிலும் பிற்போக்கு அடைந்துதான் இருந்தது. ருஷியர்கள் பன்னிரன்டு வருஷத் திட்டம் ஒன்றை வகுத்து, அந் நாட்டின் வருமானத்தை 5 மடங்கு அதிகப்படுத்தினார்கள்.

ருஷியா அடைந்த முன்னேற்றத்தை நாமும் ஏன் அடையக் கூடாது? 15 வருஷத்திற்குள் செய்து முடிக்க வேண்டுமென்ற தீர்மானத்துடன் ஒரு பொருளாதாரத் திட்டத்தை நாமும் ஏற்படுத்திக் கலங்கா மனத்துடன் முயற்சி செய்வோமானால், நம் நாட்டு மக்களின் வாழ்க்கையைச் சுக வாழ்க்கையாக அமைக்கலாம். நம் நாடு அறிவிலும் நாகரிகத்திலும் முன்னணியில் இருக்கிறதென்று நாம் பெருமை பாராட்டிக்கொள்கிறோம். இலட்சக் கணக்கான மக்கள் உணவில்லாமல் பட்டினி கிடக்கும் ஒருநாட்டில், எவ்வளவு சாஸ்திரங்களும், வேதாங்கங்களும் இருந்த போதிலும் சிறிதும் பயனேயில்லை. நாட்டில், பசியால் வருந்தும் ஒருவனாவது இல்லையென்று சொல்லக்கூடிய நிலைமைக்கு வந்தால்தான் நாமும் நாகரிக மக்கள் என்று சொல்லிக்கொள்ள உரிமையுண்டு.

**" இனியொரு விதி செய்வோம் - அதை**
**எந்த நாளும் காப்போம் ;**
**தனியொருவனுக்கு உணவிலை யெனில்**
**சகத்தினை யழித்திடு வோம்."**

என்று கோபாவேசத்துடன் பாரதியார் பாடினார். தனியொருவனுக்கு உணவில்லை யெனும் வாக்கே இல்லாமலிருக்கும்படி செய்யும் விதிதான் எல்லாப் பொருளாதாரத் திட்டங்களின் அடிப்படையான கருத்து.

# 7. சினிமாக் கலை

—○❋○—

சினிமா பார்ப்பதில் எனக்கு மிக்க அவா. சிறு வயதிலிருந்தே எனக்கு நாடகங்கள் பார்ப்பதில் வெகு ஆசையுண்டு. 35 வருஷங்களுக்குமுன் கோயமுத்தூரில் ஆதம்சா மக்கானும், சாரதா விலாஸ் கொட்டகையும் பேர்போன நாடக சாலைகள். சாரதா விலாஸ் கொட்டகை எங்கள் வீட்டிற்கு எதிர்ப்புறம் அமைந்திருந்தது. அதன் சொந்தக்காரரான சுப்ரமணிய செட்டியார் என் தகப்பனுருடைய நெருங்கிய நண்பர். என் தகப்பனுருக்குத் தெரியாமல் சுப்ரமணிய செட்டியாரிடமிருந்து இலவச டிக்கட்டு வாங்கிக்கொண்டு நான் அடிக்கடி நாடகம் பார்க்கப்போவது வழக்கம்.

'ஒவ்வொரு சனி, செவ்வாய், வியாழன்தோறும் நாடகம் நடத்தப்படும்' என்று 'டிராமா' நோட்டீசில் விளம்பரப்படுத்தியிருக்கும், ஜி. எஸ். முனுசாமி நாயுடு, கவாய் தர்மலிங்கம் பிள்ளை, ஸ்திரீ பார்ட் ரங்கசாமி அய்யங்கார், பாலாமணி—இவர்களில் யாராவது நடிக்கப் போகிறுர்களென்ருல், எனக்கு உண்டாகும் குதூகலத்தைச் சொல்லி முடியாது. அந்தக் காலத்தில் என்னை யாராவது 'உன்னுடைய வாழ்க்கையில் எப்படியிருக்க வேண்டுமென்று ஆசைப்படுகிருய், என்று கேள்வி கேட்டிருந்தால், 'ஜி. எஸ். முனுசாமி நாயுடுவைப்போல் நாடக மேடையில் புகழ்பெற நடிக்க வேண்டுமென்பதே என்னுடைய அவா' என்று கட்டாயம் சொல்லியிருப்பேன்.

கோயமுத்தூரை விட்டுக் கல்லூரியில் சேருவதற்குச் சென்னைக்குப்போன பின்னும் நாடக ஆசையை விட வில்லை. சென்னைச் சுகுண விலாச சபையில் நாடகங்கள் நல்ல முறையில் நடத்தப்பட்டு வந்தன. சுகுண விலாச சபையில் ஓர் உறுப்பினனுகச் சேர்ந்தேன். சபையில் நடந்த நாடகங்களில் நானும் சில சமயம் 'பார்ட்' எடுத்துக் கலந்து கொண்டிருந்தேன்.

சினிமாக் காட்சிகள் அதிகமாகவே, எனக்கிருந்த நாடக ஆசை சினிமாவில் திரும்பியது. எந்த ஊரில் இருக்க நேர்ந்த போதிலும், சராசரி மாதம் 2 அல்லது 3 முறைகளுக்குக் குறையாமல் சினிமா பார்ப்பது என்னு டைய வழக்கமாகிவிட்டது. போன வருடம் சர்க்கார் வேலையாக அமெரிக்காவில் இருந்தபோது ஒவ்வொரு வார மும் 2 அல்லது 3 முறை சினிமா பார்த்துக்கொண்டிருந் தேன். ஏனென்றல், அந்த நாட்டில் சினிமாப் படங் களும், கொட்டகைகளும் அவ்வளவு கவர்ச்சியை உண்டு பண்ணுகின்றன.

தமிழ்ப் படங்கள் முதன் முதல் வெளிவந்தபோது, அவைகளைப் பார்த்தபோது எனக்கு வெறுப்பு உண்டா யிற்று. ஏனென்றல், இங்கிலீஷ் சினிமாவைப் பார்த்து இன்பம் அனுபவித்த கண்களுக்குத் தமிழ்ப் படங்களின் கதை, நடிப்பு, தயாரிப்பு—எல்லாம் அவ்வளவு நல்ல முறையில் அமைந்தனவாகக் காணப்படவில்லை. கொஞ்ச நாட்கள் தமிழ்ப்படங்களையே பார்ப்பதில்லை என்று முடிவு கட்டியிருந்தேன். தமிழ்ப் படங்களும் கூடிய வரையில் நாளுக்கு நாள் நன்கு தயாரிக்கப்பட்டு வரவே, இந்த முடிவை மாற்றிவிட்டேன். சென்ற 3 அல்லது 4

வருஷங்களாக முக்கியமான தமிழ்ப் படங்களைப் பார்த்து வருகின்றேன்.

தமிழ்ப் படங்கள் பத்து வருஷங்களுக்கு முன்பு இருந்ததைவிட இப்போது எவ்வளவோ முன்னேற்றம் அடைந்திருந்தபோதிலும், மேலும் பல சீர் திருத்தங்கள் அவசியமாயிருக்கின்றன.

முதன் முதலாக, படத்தின் அளவைக் குறைக்க வேண்டும். தமிழ்ப் படங்களின் நீளம் சராசரி 18 அல்லது 20 ஆயிரம் அடியாக உள்ளது. பார்க்கும் நேரம் சுமார் 3½ மணி நேரமாகிறது. தமிழ்ப் படங்களில் முதன் முதல் செய்யவேண்டிய சீர்திருத்தம் படத்தின் நீளத்தை 12,000 அடிக்குள் நிறுத்தவேண்டும் என்பதே. இதற்கு விரோதமாக அநேக சமாதானங்களும், காரணங்களும் கூறப்படும் என்பதும் எனக்குத் தெரியும். ஆனால், இந்த விஷயத்தில் எந்தச் சமாதானத்தையும் நான் ஒப்புக் கொள்ளத் தயாராயில்லை. எந்தக் காரணத்தைக்கொண்டும் சினிமாக் காட்சி 2½ மணி நேரத்திற்குமேல் நடத்தக் கூடாது. இந்தக் கால அளவுக்குத் தகுந்தபடி படங்களின் நீலத்தைக் குறைப்பது மிக மிக அவசியமாகும்.

படத்தின் கதை விஷயத்தில் பெரிய திருத்தப்பாடு உண்டாக வேண்டும். புராணக் கதை, சரித்திரக் கதை, சமூக வாழ்க்கை கதை—என்று கதைகளை மூன்று வகுப்பாகப் பிரிக்கலாம். இதுவரை வெளிவந்த தமிழ்ப் படங்களெல்லாம் புராணக் கதைகளை ஒட்டியே இருக்கின்றன. புராணக் கதைகள் கூடாது என்று நான் சொல்லவரவில்லை. தமிழில் சினிமாக் கலை முன்னேற்றமடைய வேண்டுமானல், சமூக வாழ்க்கைக் கதைகள் ஏராளமாக

வெளி வரவேண்டும். ஜனங்கள் புராணக் கதைகளைத் தான் விரும்புகின்றார்கள் என்பதை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தெலுங்குப் படங்களில் அநேகமாகச் சமூக வாழ்க்கைக் கதைகள் கையாளப்படுகின்றன. இந்தப் படங்களைத் தமிழ் நாட்டு மக்களும் அதிகமாக ஆதரிக்கிறார்கள். பிறமொழியில் வரும் சமூகக் கதைகளைத் தமிழ் மக்கள் இவ்வளவு அனுபவித்தால், தமிழ் மொழியில் இம்மாதிரிக் கதைகளை அனுபவிக்கமாட்டார்களென்று ஏன் எண்ண வேண்டும்?

சினிமாவில் சங்கீத அமைப்பைப்பற்றிக் கருத்து வேற்றுமையுண்டு. இங்கிலீஷ் நாடகங்களில் பாட்டு இல்லை; ஆகையால், தமிழ் நாடகங்களிலும் பாட்டுக்கள் கூடாது என்று சிலர் சொல்வதுண்டு. இந்தக் காரணத்தை நான் ஒப்புக்கொள்ள மாட்டேன். தமிழ் நாடகங்களிலும் படங்களிலும் ஓர் அளவுக்குப் பாட்டு அவசியம்தான் என்பது என்னுடைய கருத்து. ஆனால், இப்போது வழக்கத்திலிருக்கும் அவ்வளவு பாட்டுக்கள் படங்களில் இருப்பது பொருத்தமில்லை. பாட்டுக்கள் அதிகமாக இருப்பதோடன்றிச் சங்கீதமும் மிகவும் பிற்போக்காக இருக்கிறது. அர்த்தமில்லாத வார்த்தைகளையும், இந்துஸ்தானி மெட்டுக்களையும் கேட்க என் காதுகள் இடங்கொடுக்கவில்லை. பாட்டுக்களைக் கொஞ்சம் குறைக்க வேண்டும். பாடும் திறமையுள்ள நடிகர்களுக்குத்தான் பாட்டுக்களைக் கொடுக்க வேண்டும். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் பாட்டுக்களை நுழைக்க வேண்டிய அவசியமில்லை.

ஒரு படத்திற்கு நடிகர்களைத் தேர்ந்தெடுப்பது மிகவும் முக்கியமான விஷயம். சங்கீதத்தில் ஒருவர் தேர்ச்சி

பெற்றிருந்தால், அதனாலேயே அவர் நடிகராக வருவதற்குத் தகுதியுள்ளவர் என்று எண்ணிவிடக்கூடாது. நடிப்பு ஒரு தனிக் கலை. அத்தக் கலையில் தேர்ந்தவர்களே நாடகத்திற்குப் பொருந்தினவர்கள். இன்னொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். நடிகர்களுடைய உருவம், தோற்றம், வயது ஆகிய இவைகள், அவர்கள் நடிக்கும் 'பார்ட்'டுக்குக் கூடுமான வரையில் பொருத்தமாக இருக்க வேண்டும். குசேலன் 'வேடத்தில்' ஒரு குண்டோதரன் நடித்தால் எப்படியிருக்கும் ? பதினெட்டு வயதுக் குமரியின் வேடத்தை 45 வயதுள்ள ஒரு பெண் மேற்கொண்டால் எவ்வளவு கேவலம்? படம் பிடிப்பவர்களும், பட முதலாளிகளும் இந்த விஷயத்தில் முக்கியமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

மக்கள் இதைத்தான் விரும்புகிருர்கள், அதைத்தான் ரசிக்கிருர்கள் என்று, எல்லா ஆபாசத்திற்கும் ஜனங்கள்மேல் பழியைப் போடுவது சரியான முறையன்று. ஜனங்களுக்குச் சரியான வழியில் கலை அறிவை ஊட்டுவது சினிமாத் தொழிலில் இறங்கியவர்களுடைய கடமை. சினிமா ஒரு நல்ல கலை. அதில் இயல், இசை, நாடகம், சித்திரம், சிற்பம், நாட்டியம் முதலிய எல்லாக் கலைகளும் அடங்கியிருக்கின்றன. இவ்வளவு உயர்ந்த ஒரு கலையை நல்ல முறையில் தமிழ் நாட்டில் வளர்ப்பது தமிழுக்கும், தமிழ் மக்களுக்கும் செய்யும் சிறந்த தொண்டுகளில் ஒன்று என்று நான் கருதுகிறேன்.

# 8. நாட்டின் பொதுக்கடன்

—○✻○—

மக்களுக்குப் பெருந் தொந்தரவு கொடுப்பனவற்றுள் கடனும் ஒன்ருகும். இத்தொந்தரவு இருசாராரிடத்தும் உண்டு. அதாவது கடன் கொடுப்பவருக்கும் உண்டு; கடன் வாங்கினவர்களுக்கும் உண்டு. ஆனுல், இக்காலத்தில் கடன் வாங்கினவர்கள் மேலானவர்களாகவும், கடன் கொடுத்தவர்கள் தாழ்ந்தவர்களாகவும் மாறிவிடுகின்றனர். கடன் வாங்கினவர்கள் செய்யும் அதிகாரம் அளவுக்கு மிஞ்சியதாயுள்ளது, இதனுல் கடன் கொடுக்கக் கூடாதென்ருே வாங்கக் கூடாதென்ருே நினைத்தல் வேண்டா. ஏனெனில் பெரிய பெரிய அரசாங்கங்களும் கடன் தொல்லையில் அகப்பட்டுக்கொண்டுதான் இருக்கின்றன. இங்கிலாந்து சாதாரணமான நாடு அன்று; செல்வாக்குடைய நாடு. அத்தகைய நாடும் இப்போது ஏறக்குறைய 1500 கோடி பவுன் கடன் பட்டிருக்கிறது. போர் நடக்கும்போது மேலும் பல கோடி பவுன்களைக் கடனுக வாங்கியது.

இங்ஙனம் இந்த உண்மை தெரியவந்ததும், ஒரு சிலர்க்குச் சில ஐயங்கள் தோன்றலாம். சர்க்கார்தான் குடிமக்களிடத்திலிருந்து பலவிதமான வரிகளை வசூலிக்கின்றனரே, அப்படி இருக்க ஏன் கடன் வாங்க நேரிடுகிறது? வரவுக்கு மீறிச் செலவு செய்து கடனில் அகப்பட்டுக் கொள்ளுதல் முறையாகுமா என்றெல்லாம் கேட்கலாம்.

கேள்விகள் முறையான கேள்விகளே. இக்கேள்வி கட்கு முறையாக விடை சொல்ல வேண்டியதுதான். இதனை உதாரண முகத்தால் விளக்கினால் கடன் வாங்க வேண்டிய அவசியம் எளிதில் நன்கு தெரியவரும். ஒருவருக்கு ஆண்டுக்கு ரூ 20,000 வரவு வருகிறது என்று வைத்துக் கொண்டால், இதற்குமேல் செலவு போகாத வாறு பார்த்துக்கொள்ள வேண்டியதுதான். ஆனால், வாணிபத்தின் பொருட்டு ரூ 60000 தேவையானால், அதனை நடத்தும் பொருட்டுக் கடன் வாங்குவது தவறாகுமோ? அல்லது நல்ல நிலபுலன்களை வாங்குவதற்கு ரூ 90,000 வேண்டியிருந்தால் கடன் பெறுவது குற்றமாகுமோ? இவற்றின் பொருட்டு நமது வருவாயில் இருந்து எடுப்பது முடியாதல்லவா? இதுபோலவே சர்க்காரும் தமது வரிப் பணத்திலிருந்து எடுத்துக்கொள்ள முடியாத சமயத்தில் கடன் வாங்கித்தான் இன்றியமையாத செலவுகட்குச் செலவுசெய்ய வேண்டும். மேட்டூர் அணைக்கட்டு, பைக்காரா மின்சார வேலை, இரயில் பாதைகள் அமைப்பது, சர்க்கார் கைத்தொழிற் சாலைகள் ஏற்படுத்துவது போன்ற வேலைகளுக்கு ஏராளமான பொருள் தேவையாகும். இவற்றை யெல்லாம் வரிப் பணத்தில் வரும் வருவாயைக் கொண்டு நடத்த வேண்டுமானால், வரிகளை அதிகப்படுத்திக் குடி மக்கள் தலையில்தான் சுமத்த வேண்டும். ஆகவே, மேலே குறிப்பிட்ட இன்றியமையாத செயல்களை நல்ல முறையில் நடத்தச் சர்க்கார் கடன் வாங்கியே தீர வேண்டும். இந்தக் கடனையும் இதற்குரிய வட்டியையும் அணைக்கட்டு, இரயில்வே, பைக்காரா அணை ஆகிய இவற்றை அமைப்பதனால் வரும் வருவாய் கொண்டு தீர்த்தல் வேண்டும். இவற்றின்

பொருட்டு வாங்கப்படும் கடனே **ஆதாயமுள்ள கடன்** என்று கூறப்படும். இந்த ஆதாயமுள்ள கடனுல் கட்டப்பட்ட மேட்டூர் அணைக்கட்டினுல் லட்சக் கணக்கான விளைநிலங்கள் பயிர் செய்யப்பட்டு நல்ல விளைவுகள் ஏற்பட்டுள்ளன. பைக்காரா மின்சாரத் திட்டத்தினுல் எத்தனையோ கைத்தொழில் சாலைகள் தோன்றியுள்ளன. இவைகள் எல்லாம் நாட்டின் செல்வத்தை மிகுதிப்படுத்துமல்லவா? வளப்பமும் அதிகமாகும் அல்லவா?

மேலே ஆதாயமுள்ள கடன் என்று குறிப்பிட்டதனுல், ஆதாயமில்லாத கடன்களும் சர்க்காருக்கு ஏற்படுமோ என்னும் சந்தேகம் எழவும் கூடும். ஆம், இச் சந்தேகம் எழத்தான் வேண்டும். சந்தேகிப்பது போலவே ஆதாய மில்லாத கடன்களும் அரசாங்கத்தாருக்கு ஏற்படுவதுண்டு. இக்கடன் சில காரணங்களால் ஏற்படும். அவை போர்க் காரணமாகவும், அதிகப்படியான செலவின் பொருட்டும் ஏற்படும் கடன்களாம். போர்க் காலங்களில் உண்டாகும் செலவுகளைக் குடிமக்களிடமிருந்து பெறும் வரிகளின் மூலம் சரிகட்ட முடியாத இந்தத் தருணத்தில் போரின் நிமித்தம் கடன் வாங்கியே தீர வேண்டும். சிற்சில சமயங்களில் மழையின்மை காரணத்தாலும், வெள்ளப் பெருக்கின் காரணத்தாலும் குடிமக்கள் வரி செலுத்த இயலாமல் இருக்க நேரிடுவதும் உண்டு. இதனுல் வரியின் மூலம் வரும் வருவாய் குறைந்து போகும். வருவாய் குறையச் செலவு மட்டும் அதிகரித்துக்கொண்டு போகும். இந்த விதமான சமயங்களில் அரசாங்கம் கடன் வாங்கியே தீரவேண்டும். இவ்விரு காரணங்களால் வாங்கப்படும் கடனே ஆதாயமில்

லாத கடன் எனப்படும். ஆகவே நாம் ஒரு நாட்டின் ஆதாயமுள்ள கடன் எவ்வளவு, ஆதாயம் இல்லாத கடன் எவ்வளவு என்பதையும் அறிந்திருத்தல் நலமாகும்.

சர்க்காருக்குக் கடன் ஏற்படும் விதத்தை அறிந்த நாம் கடனைச் சர்க்கார் யாரிடம் இருந்து வாங்குகிறது என்பதையும் அறிந்து கொள்ளுதல் அவசியம் அல்லவா? குடிமக்களிடமிருந்தும் வெளிநாட்டிலிருந்தும் கடன் வாங்கப்படும். குடிமக்களிடமிருந்து பெறும் கடன் **உள்நாட்டுக் கடன்** என்றும், வெளிநாட்டிலிருந்து பெறும் கடன் **வெளிநாட்டுக் கடன்** என்றும் கூறப்படும்.

உள்நாட்டுக் கடன் வாங்குவதாய் இருந்தால் சர்க்கார் கடன் சம்பந்தமான அறிக்கைகளைப் பத்திரிகை மூலம் விளக்கமாக விளம்பரப்படுத்த வேண்டும். தங்களுக்கு வேண்டிய தொகை இவ்வளவு என்பதையும், அத்தொகைக்கு இத்தனை வீதம் வட்டி கொடுக்கப்படும் என்பதையும், இத்தனை வருஷங்களுக்குப் பிறகுதான் இந்தக் கடன் திருப்பிக் கொடுக்கப்படும் என்றும் தெளிவாகக் குடிமக்களாகிய பொதுமக்களுக்கு அறியப்படுத்த வேண்டும். கடன் கொடுக்க விரும்புபவர்கள் பாங்கியின் மூலம் விண்ணப்பம் கொடுத்துத் தாங்கள் கொடுக்கும் கடன் தொகையைச் செலுத்தி, அதற்கு ஆதாரமாக ஒரு சர்க்கார் பத்திரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். சர்க்கார் பாண்டு நம்மிடம் இருக்குமானால் நாம் கடனைக் கொடுத்த பணத்தைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதே இல்லை. வட்டித் தொகையை ஆறுமாதத்திற்கு ஒரு முறை பெற்றுக்கொள்ளலாம், அசல் தொகையைக் குறிப்பிட்ட ஆண்டில் வாங்கிக் கொள்ளலாம்,

வெளிநாட்டுக் கடன் எப்படி வாங்கப்படுகிறது எனில், நம் இந்திய சர்க்கார் இங்கிலாந்தில் இரயில்வே என்ஜின்கள், வண்டிகள், கைத்தொழில் இயந்திரங்கள் முதலான இன்றியமையாத பொருள்களை வாங்க நேரிட்டால், இங்கிலாந்து மக்களிடம் கடன் வாங்க வேண்டும். இங்கிலாந்து மக்களுக்கு நம் இந்திய நாட்டு நாணயங்களைக் கொடுத்தால் அவை செல்லுபடியாகா; அவர்கட்கு ஸ்டர்லிங் நாணயமாகக் கொடுக்க வேண்டும். நமக்கு எப்படி ரூபாய் நாணயமோ, இதுபோல அவர்கட்கு ஸ்டர்லிங் நாணயமாகும். ஆகவே இந்த மாதிரியாக ஏற்படும் கடன் ஸ்டர்லிங் கடன் என்று கூறப்படும்.

இங்ஙனம் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ சர்க்கார் வாங்கும் கடன் நாட்டின் பொதுக்கடன் எனப்படும். நம் இந்தியா தேசமும் இந்தப் பொதுக் கடனில் ஈடுபட்டுள்ளது. இதனை விளக்கமாகக் கீழே குறிப்பிடப்படும் புள்ளி விவரங்களிலிருந்து நன்கு தெரிந்துகொள்ளலாம். 1939 ஆம் ஆண்டு மார்ச்சு மாதத்தில், அதாவது போர் தொடங்குவதற்கு முன்பு, நம் நாட்டின் மொத்த கடன் 1205 கோடி ரூபாய்.

இத்தொகையில் உள்நாட்டுக் கடன் 736 கோடி ரூபாய், இங்கிலாந்தில் வாங்கிய கடன் 469 கோடி ரூபாய். வெளிநாட்டுக் கடன் எனப்படும் இங்கிலாந்தில் வாங்கிய கடன், பிரிட்டிஷ் அரசாங்கத்தார் போருக்காக இந்தியாவில் வாங்கிய சாமான்களின் மூலம் பெரும் பகுதி தீர்ந்துவிட்டது. அதாவது 412 கோடி ரூபாய் கடனைத் தீர்த்து விட்டோம். எனவே, நாம் இங்கிலாந்துக்கு 57 கோடி ரூபாய்தான் கடன் கொடுக்க வேண்டும். 1943 ஆம்

ஆண்டுக் கணக்குப்படி நம் நாட்டின் மொத்தக் கடன் 1368 கோடி ரூபாய். இத்தொகையில் உள்நாட்டுக் கடன் 1311 கோடி ரூபாய், இங்கிலாந்துக்குக் கொடுக்க வேண்டிய கடன் 57 கோடி ரூபாய்.

1368 கோடி ரூபாய் கடனில் ஆதாயமுள்ள கடனும் ஆதாயமில்லாக் கடனும் அடங்கியிருக்கின்றன. ரயில் வேக்கு 757 கோடி ரூபாய், தபால் தந்தி இலாகாவின் பொருட்டு 33 கோடி ரூபாய், மாகாண கவர்மெண்டு களுக்குக் கொடுத்துள்ள கடன் 132 கோடி ரூபாய், பர்மாவுக்கு உதவிசெய்த கடன் 48 கோடி ரூபாய், ரொக் கக் கடன் 105 கோடி ரூபாய், ஆக 1075 கோடி ரூபாய் ஆதாயமுள்ள கடன்களாம். மிகுதியான 293 கோடி ரூபாய் கடன் ஆதாயமில்லாத கடன்களாம். மாகாணங் களுக்குக் கொடுக்கப்படும் கடன் அணைக்கட்டுகள், ஏரிகள், மின்சார வேலைகள் ஆகிய இவற்றின் அபிவிருத் தியின் பொருட்டுச் செலவு செய்வதற்காகும். இவ்வாறு கோடிக் கணக்கில் கடன் இருக்கிறதே என்று நாம் மலைத்து விடுதல் கூடாது.

இந்தக் கடன் பொருட்டுக் கொடுக்கப்படும் வருஷ வட்டியினைக் கேட்டாலும் மலைப்புத்தான் வரும். வருட வட்டி இந்தக் கடனுக்காகக் கொடுக்கப்படுவது 40 கோடி ரூபாய் ஆகும். பெருந்தொகையான கடன் இரயில்வே சீர்திருத்தத்தின் பொருட்டும், தந்தி தபால் அபிவிருத்தியின் பொருட்டும் வாங்கப் படுதலின், அவற் றால் கிடைக்கும் வருவாயிலிருந்து வட்டி கொடுக்கப் படுகிறது. 40 கோடி ரூபாய் வட்டியில் 33 கோடி ரூபாய் வட்டி இரயில்வே தபால் வருவாயிலிருந்து கொடுக்கப் படுகிறது. வரி வசூலின் மூலம் நம் இந்திய சர்க்கார் கொடுக்கும் வட்டி ஆண்டுக்கு ஒருமுறை 7 கோடி ரூபாய் தான். இம்முறையில் நம் நாட்டின் கடன் நிலைமையினை அலசிப் பார்த்தால் நம் நாட்டின் பொருளாதார நிலைமை இன்னது என்பது நன்கு புலப்படுகிறதல்லவா?

# 9. போர்ச் செலவு

—○❋○—

நாட்டில் போர் தொடங்கினுல் ஆட்சேதம், பொருட் சேதம் உண்டாகும் என்பது யாவரும் அறிந்த விடயம். இந்தச் சமயத்தில் செலவும் கட்டுக்கு அடங்காது மீறிப்போகும். இதனை, 1943ஆம் வருடம் மார்ச்சு மாதம் வரையில் பிரிட்டிஷ் சர்க்காருக்குப் போரின் காரணமாக 1500 கோடி பவுன் செலவாகி யிருக்கிறது என்பதை நீங்கள் கேள்வியுற்ருல் அப்படியே மலைத்துப் போவீர்கள். ஒரு பவுன் நம் நாட்டு 14 ரூபாய்களுக்குச் சமம். அப்படியானல் நம் நாட்டு ரூபாய் மதிப்பாகக் குறிப்பிடவேண்டுமானுல் 21000 கோடி ரூபாய் சண்டையின் பொருட்டுச் செலவாகி இருக்கிறது என்னலாம்.

இவ்வளவு பெருந்தொகையினைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எப்படிப் பெற்றனர். இவ்வளவையும் வரியின் மூலம் வசூல் செய்திருப்பாரோ என்று நினைக்கலாம். இவ்வளவையும் வரியின் மூலம் வசூல் செய்ய முடியுமா? அது முறையும் ஆகுமா? எந்த நாட்டிலும், அந்த நாடு போரில் ஈடுபட்டிருந்தால், போருக்காகச் செலவாகும் தொகையில் ஒரு பாகத்தைத்தான் வரி வசூல் செய்ய வேண்டுவது முறைமை, வழக்கமும் ஆகும். மிகுந்த செலவை கடன் வாங்கிச் சமாளிப்பார்கள். மேலே குறிப்பிட்ட 1500 கோடி பவுன் போர்ச் செலவை, பிரிட்டிஷார் 700 கோடி பவுனை வரியின் மூலமாகவும், 300 கோடி பவுனைக் கடனுகவும் வசூல்

செய்திருக்கின்றனர். இது பிரிட்டிஷாருக்குப் போரின் நிமித்தம் ஏற்பட்ட கடன்.

நம் நாடாகிய இந்தியா, போர் ஆரம்பமானது முதல் எவ்வளவு ரூபாய் போருக்காகச் செலவிட்டிருக்கிறது என்று பார்ப்போம். 1939ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் போர் தொடங்கியது முதல் நாலரை ஆண்டுகள் வரை நம் அரசாங்கத்தாருக்குச் சுமார் 675 கோடி ரூபாய் போரின் நிமித்தம் செலவு ஏற்பட்டிருக்கிறது. போருக்கு முன், நம் நாட்டில் பாதுகாப்பின் பொருட்டு வைக்கப்பட்டிருக்கும் படைகளுக்கு வருடம் ஒன்றுக்குச் சுமார் 48 கோடி ரூபாய் செலவேற்பட்டுக்கொண்டிருந்தது. நம் நாட்டில் ஒன்றும் சண்டை நிகழவில்லையே; ஆப்ரிக்காவிலும், இத்தாலியிலும், சிங்கப்பூரிலும் நடந்த சண்டைகளுக்கு நம் அரசாங்கம் பணம் கொடுத்திருக்கிறதா? ஏன் போர் நடந்த நாலரை ஆண்டுகளில் 675 கோடி ரூபாய் போர்ச் செலவாக ஏற்படுதல் வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம்.

இந்த நினைப்பு ஒரு நல்ல நினைப்புத்தான். நாம் செலவிடும் போர்ச் செலவை எப்படிப் பங்கீடு செய்வது என்பதைப் பற்றிப் பிரிட்டிஷ் அரசாங்கமும், இந்திய அரசாங்கமும் கலந்து ஆலோசனை செய்து ஒரு முடிவுக்கு வந்தனர். நம்முடைய சேனைகளில் ஆட்களைச் சேர்ப்பதற்கும், அவர்களைப் பழக்குவதற்கும் அவர்கட்கு வேண்டிய ஆயுதங்களையும் மற்றச் சாமான்களையும் வாங்குவதற்கு ஏற்படும் எல்லாச் செலவுகளையும் நம் அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இப்படி நாம் திரட்டி வைக்கும் சைனியங்களை வெளிநாடுகளுக்கு அனுப்ப நேரிட்டால், படைகள் இந்தியாவிலிருந்து

புறப்படும் தேதி முதல் திரும்பி வரும் தேதி வரையில் ஏற்படும் செலவுகளைப் பிரிட்டிஷ் அரசாங்கம் ஏற்றுக் கொள்கிறது. இவ்விதமே வெளியே அனுப்பப்பட்ட பட்டாளங்களைப் பழக்கின செலவையும், அவர்களிடமிருக்கும் ஆயுதங்களின் விலையையும் பிரிட்டிஷ் சர்க்கார் நமக்குத் திருப்பிக் கொடுத்துவிடுகின்றனர். ஆனால் இந்தியாவின் பாதுகாப்புக்கென்று ஏற்படும் எல்லாச் செலவுகளையும் நம்முடைய சர்க்காரே ஏற்றுக்கொள்ள வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி, நமக்குப் பிரிட்டிஷ் அரசாங்கத்தாரால் வரவு வந்த தொகை போக, நம்முடைய நாட்டிற்கு மட்டும் 675 கோடி ரூபாய் செலவு இதுவரை ஏற்பட்டிருக்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் தான் நம்முடைய பட்டாளங்கள் இந்தியாவை விட்டு வெளி நாடுகளுக்குச் சண்டையின் பொருட்டுப்போனால் அதற்கு ஏற்படும் செலவை ஏற்று நமக்குக் கொடுத்து வரும்போது, ஏன் நமக்குப் போர் சம்பந்தமாக 675 கோடி ரூபாய்க்கு மேல் செலவாகி இருக்கிறது என்று கேட்கலாம். இதற்குரிய காரணத்தையும் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம்தான்.

போருக்கு முன் இருந்த பட்டாளங்களின் எண்ணிக்கை குறைவு. ஆனால் போர்க் காலத்தில் அந்தத் தொகை பத்து மடங்கு அதிகரித்துவிட்டது. 1938ஆம் ஆண்டு நம் சைனியத்தில் சுமார் இரண்டு இலட்சம் சிப்பாய்கள் இருந்தனர். ஆனால் போர் நடந்த காலத்தில் இருபது இலட்சம் சிப்பாய்கள் பட்டாளத்தில் சேர்ந்திருந்தார்கள். இவ்வளவு பெரிய படை ஜப்பானியர்களால் நாம் தாக்கப்பட்டு அழிவுறாமல் இருப்பதற்காக இந்தியாவில் கூட்டவேண்டி இருந்தது. காலாட் படைகள் பெரு

இயதுபோலவே, விமானப்படை, கப்பற்படை, ஆகியவை களும் ஏராளமாகப் பெருகின. நம் நாட்டில் பல இடங்களில் பெரிய ஆகாய விமான நிலையங்களாகிய ஏரோட்ரோம்கள் அமைக்கப்பட்டன. பட்டாளத்திற்கு வேண்டிய விடுதிகள், மருத்துவச் சாலைகள், பண்டக சாலைகள் முதலியன ஏராளமாக அமைக்கப்பட்டன. பட்டாளங்களுக்கு வேண்டிய தந்தி, தபால் வசதிகள், பெருக்கப்பட்டன. சிப்பாய்களையும், கப்பற்படை வீரர்களையும், விமான ஓட்டிகளையும் பழக்குவதற்குப் பல ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இவற்றின் பொருட்டுப் பெருவாரியான செலவுகள் ஏற்பட்டன. இவற்றை யெல்லாம் நன்கு ஆராய்ந்து பார்ப்போமானால், போருக்கென 675 கோடி ரூபாய் செலவாயிருக்கும் என்பதை உண்மையெனக் கருதலாம் அல்லவா? இவ்வளவு செலவையும் கடன் வாங்கியும், வரி வசூலித்தும் ஈடு கட்டினர். இதன் பொருட்டுச் சுமார் 520 கோடி ரூபாய் வரிகளின் மூலமும், சுமார் 155 கோடி ரூபாய் கடன் மூலமும் வசூலிக்கப்பட்டன. வரிகளின் மூலமாக வசூலிக்கப்பட்டன என்றதும் பொதுமக்களைக் கசக்கிப் பிழிந்து வரிகளை வாங்கி விட்டார்கள் என்று கருத வேண்டா. எந்தெந்த முறைகளில் வரிகள் வசூலிக்கப்பட்டன என்பதையும் கீழ்வரும் உண்மைகளிலிருந்து அறிந்துகொள்ளுங்கள்.

1938ஆம் ஆண்டு இந்திய அரசாங்கத்திற்கு எல்லா வரிகளிலிருந்தும் சுமார் 72 கோடி ரூபாய் வருமானம் வந்தது. அதன்பின் 154 கோடி ரூபாய்க்கு மேல் வரிகளிலிருந்து வசூலாகிறது. இந்த இரு தொகைகளை நாம் கவனிக்கும்போது இரட்

டிப்பாக வரி வசூலிக்கப்பட்டது என்பது தெரிகிற தல்லவா ? போர் தொடங்கியது முதற்கொண்டு எல்லா வரிகளேயும் உயர்த்தியுள்ளார்கள். வரிகள் உயர்த்தப் பட்டாலும், சில வரிகளிலிருந்து வரும் வசூல் குறைந்து விட்டது. துறைமுகத்தில் ஏற்றுமதி இறக்குமதியின் பொருட்டு விதிக்கப்படும் சுங்க வரி குறைந்துவிட்டது. 1938ஆம் ஆண்டு இந்த விதமான சுங்க வரியின் மூலம், 40 கோடி ரூபாய் சுங்க வரி வசூலாயிற்று. ஆனால் பின்னல் 30 கோடி ரூபாய்தான் வந்தது. இதற்குக் காரணம் சண்டையினுல் கப்பல்களின் போக்கு வரவு குறைவுற்றதே யாகும். இதனுல் வெளிநாடுகளிலிருந்து வரும் சரக்குகளும் மிகவும் குறைந்து போயின. இந்த வகையில் சுங்க வரி குறைந்ததனுல் வருமான வரி அதிக மாக உயர்த்தப்பட்டது. 1938ஆம் ஆண்டில் வருமான வரியின் மூலம் 17 கோடி ரூபாய் வசூலாயிற்று. ஆனுல், அதன் பின் வருமான வரியின் மூலம் வந்த வரவு 102 கோடி ரூபாயாகும். நம் அரசாங்கத்தார் வருமான வரியை உயர்த்தியதோடு நில்லாமல் **அதிக லாப வரி** என்ற புது வரியை விதித்தனர். இந்த வரியோடு, நாட் டில் உண்டாகும் சில பண்டங்களுக்குக் **கைத்தொழில் உற்பத்தி வரி** அதாவது எக்சைஸ் வரி என்ற ஒரு வரி யினையும் அதிகப்படுத்தி யிருக்கின்றனர். நம்முடைய நாட்டில் உண்டாகும் இரும்பு, சர்க்கரை, தீப்பெட்டி, சிமெண்ட் முதலிய பண்டங்களின் மேலும் இந்த வரி போடப்பட்டுள்ளது. 1938ஆம் ஆண்டு இந்த வரியின் மூலம் 9 கோடி ரூபாய்தான் வசூலாயிற்று. அதன் பின் 25 கோடி ரூபாய் வசூலாயிற்று.

அதிக லாப வரி என்பதை மேலும் தெளிவாக நாம் அறிதல் வேண்டும். அதாவது போருக்கு முன் என்ன இலாபம் வந்ததோ, அதற்குமேல் வரும் இலாபத்திலி ருந்து மூன்றில் இரண்டு பாகம் அதிக லாப வரி என்று கூறப்படும். ஒரு தொழிற்சாலைக்கு 1938ஆம் ஆண்டு 4 லட்ச ரூபாய் இலாபம் வந்தது என்று வைத்துக் கொள்வோம். அத் தொழிற்சாலைக்கு அடுத்த ஆண்டு களில் வருடம் 25 லட்ச ரூபாய் இலாபம் வருகிறதென் ருல் 21 லட்சம் ரூபாய் அதிக இலாபமான வருவாய் அல்லவா ? இந்த விதமாக 21 லட்ச ரூபாயில் 14 லட்ச ரூபாயை அதிக லாப வரியாகச் சர்க்காருக்குக் கொடுத்து விடவேண்டும். இதோடடல்லாமல் மீதி யிருக்கும் இலா பத்திலிருந்தும் வருமான வரி கொடுக்கவேண்டும். இப்படி யெல்லாம் கணக்கெடுத்துப் பார்த்தால் மொத்த லாபத்தில் 100க்கு 80க்கு மேல் இந்த வரிகளில் போய் விடும். ஒருவாறு ரூபாய் வடிவில் கணக்குக் காட்டினல் 25 இலட்சம் ரூபாய் இலாபத்தில் 20 இலட்சத்திற்கு மேல் வரி வடிவில் சர்க்காருக்குச் செலுத்த வேண்டும் என்பது தெளிவாகத் தெரியவரும். இது முறையா ? முறையற்ற தல்லவோ என்று நினைக்கலாம். இது முறைதான். முறையற்றதன்று. எப்படியெனில் அதனையும் சிறிது சிந்தித்து இங்கு முடிவு கட்டுவோம். முன்னே கூறிய தொழிற்சாலை, வருடம் நான்கு இலட்ச ரூபாய் இலாப மாக அடைந்துவந்தது. அதே தொழிற் சாலை ஆண்டுக்கு 25 இலட்ச ரூபாய் இலாபம் அடைந்ததே. அது எப்படி ? தொழிற்சாலையினை நடத்தும் முதலாளிகளின் நுண்ணறி வுத் திறத்தினுல் இந்த இலாபம் ஏற்பட்டுவிட்டதா ? இல்லை ; இல்லை. சண்டை காரணமாக வெளி நாட்டுப் பொருள்கள் நம் நாட்டிற்கு வராமல் போயின. சாமான்

கள் வராமல் போயினும் சண்டைக்காகச் சாமான்கள் வாங்கியே ஆகவேண்டும். இந்தக் காரணத்தினுல் பொருள்களின் விலை ஏற்றமடைந்து விற்கப்பட்டதனுல் பெருவாரியான இலாபம் உண்டாயிற்று. ஆகவே, பெரும் இலாபத்திற்குச் சண்டையே முதற் காரணம். இவ்வாறு சண்டைக் காலங்களில் வந்த இலாபத்தை அந்தச் சண்டைச் செலவுகட்கே கொடுப்பது நியாயம் இல்லையா? அரசாங்கமும் வரிவடிவில் இதனைப் பெறுவது முறையல்லவா ?

இந்த அதிக லாப வரி விதிப்பதிலும் நமக்கும் இங்கிலாந்திற்குமே அதிக வேறுபாடு உண்டு. நம் நாட்டில் அதிக லாபத்தில் நூற்றுக்கு 66½ பங்கைத்தான் அதிக லாப வரியாக நம் அரசாங்கம் பெற்றது. ஆனுல் இங்கிலாந்தில் சண்டை நடக்கும் காலங்களில் அதிகப்படி வரும் இலாபம் முழுமையையும் அதிக லாப வரியாக எடுத்துக்கொள்கின்றனர். சாதாரண இலாபத்திற்கும் வருமான வரி இங்கிலாந்தில் அதிகப்படியாக விதிக்கப்படுகிறது. இங்கிலாந்தில் ஒரு மனிதனுக்கு வருடம் ஒன்றுக்கு 50000 பவுன் வருமானம் என்றுல், அவன் அந்த வருமானத்தில் 45,319 பவுனை வருமான வரியாகச் செலுத்த வேண்டும். நம் நாட்டில் ஒருவனுக்கு ஆண்டு வருமானம் ரூ. 50000 என்றுல், அவனிடமிருந்து வசூலிக்கப்படும் வருமான வரி ரூ. 16000 தான்.

இதுவரை சர்க்காருக்கு வரும் வருமானங்கள் வரிகளின் மூலமாக என்பதைப் பற்றிக் கூறிக்கொண்டு வந்தோம். இனி வரிகளின் மூலமே இன்றி, வேறு வழிகளிலும் அரசாங்கத்திற்கு வருமானம் வருகின்றதா என்பதையும் அறிதல் வேண்டும்.

இரயில்வே இலாகா, தந்தி தபால் இலாகா ஆகிய இவற்றிலிருந்தும் சர்க்காருக்கு வருவாய் வந்துகொண்டிருக்கும். கடந்த சில ஆண்டுகளாக, செலவு போக இரயில்வே இலாகா மூலம் 84 கோடி ரூபாயும், தபால் தந்தி இலாக்காக்களின் மூலம் 19 கோடி ரூபாயும் ஆக மொத்தம் 103 கோடி ரூபாய் மிச்சம் ஏற்பட்டது. இந்த வருமானத்தையும் சர்க்கார் செலவிட்டிருக்கின்றனர்.

ஆகவே இதுவரை வரவு செலவுகளைப் புள்ளி விவரங்களுடன் விளக்கிவந்ததிலிருந்து போரின் பொருட்டுச் செலவான தொகை 675 கோடி ரூபாய் என்பது நன்கு தெரியவருகிறது. இவ்வாறு போர்ச் செலவினால்தான் பஞ்சமும் துன்பமும் நம் நாட்டில் ஏற்பட்டனபோலும் என்று நாம் எண்ணலாம். மேலும் சிலவற்றையும் அறிந்தீர்களானால் மற்றும் பல உண்மைகள் புலனாகும்.

நமக்குப் போரின் காரணமாக 675 கோடி ரூபாய் செலவாயிற்று என்பதை அறிந்தோம். இதோடு பிரிட்டிஷ் சர்க்காருக்காக நம் நாட்டிலிருந்தும் ஏராளமாகப் பலவித சரக்குகளும் பண்டங்களும் வாங்கப்பட்டிருக்கின்றன. இதைக் கணக்கிட்டால் சுமார் 700 கோடி ரூபாய் பெறுமான சாமான்கள் பிரிட்டிஷ் கவர்மெண்டின் பயனுக்காக வாங்கப்பட்டுள்ளன. இவ்வாறு வாங்கிய பொருள்களுக்கு பிரிட்டிஷ் சர்க்கார் ரொக்கமாகப் பணம் ஒன்றுமே கொடுக்கவில்லை. ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் கடன் பத்திரம் மட்டும் எழுதிக் கொடுத்திருக்கின்றனர், இந்தப் பத்திரங்களின் ஆதாரத்தைக் கொண்டே நம் இந்திய அரசாங்கம் பெருவாரியான

நோட்டுகளை அச்சடித்து நாட்டில் வழங்குமாறு செய்தது. பிரிட்டிஷ் அரசாங்கம் எழுதிக்கொடுத்துள்ள கடன் பத்திரத் தொகை எந்தக் காலத்தில் எந்த முறையில் தீர்த்துக்கொடுக்கப்படும் என்பதை உறுதியாக இப்பொழுது சொல்வதற்கில்லை. அது வந்தபோதுதான் நாம் பெற்றுக்கொள்ளவேண்டும். இதுவரையில் நாம் **போர்ச் செலவு** என்ற பொருளைப்பற்றி ஆராய்ந்ததில் நம் கணக்கில் செலவானது 675 கோடி ரூபாயும் பிரிட்டிஷ் கவர்மெண்டார் சார்பில் செலவானது 700 கோடி ரூபாயும் ஆகமொத்தம் 1,375 கோடி ரூபாய் போர்ச் செலவாகச் செலவழிக்கப்பட்டன என்பது தெரியவந்தது. இந்தியாவின் எளிமையான நிலையை எண்ணிப் பார்க்கும்போது இது பெருந்தொகையாகவே காணப்படுகிறது. போரில் பல நேச நாடுகளுக்கும் சில கஷ்டங்களும் செலவுகளும் ஏற்பட்டன, என்றாலும் நம் இந்தியா தேசமானது அளவுக்குமேல் போர்ச்சுமையினைத் தாங்கியது என்றுதான் முடிவு கட்டவேண்டும்.

# 10. அரவிந்த ஆசிரமம்

—○✻○—

1908ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 30-ஆம் தேதி. அப்போது எனக்கு வயது பதினாறு. வங்காள மாகாணப் பிரிவினை, சுதேசி இயக்கம், சுதந்திரப் பேச்சு யாகவும் நாடெங்கும் பரவி இருந்தன. இந்தத் தேசீயச் சூழலில் நானும், என் நண்பரில் சிலரும் எப்படி அகப் பட்டுக் கொண்டோமென்று எங்களுக்கே தெரியாது. “ வங்காளம் ” என்னும் பேச்சைக் கேட்கும்போது ஒரு புதிய உணர்ச்சி உண்டாகும். அந்நாட்டிலிருந்து வரும் பத்திரிகைகளே எனக்கு வேத வாக்கு. விஸ்வநாதப் பிள்ளை என்று ஒரு தேசபக்தர் அப்போது கோயமுத்தூரி லிருந்தார். அவருக்கு “ அம்ருத பஜார் பத்திரிகை, ” “ வந்தே மாதரம் ” இந்த இரண்டு ஆங்கிலப் பத்திரிகை களும் வருவதுண்டு. அவருடைய வீட்டிற்கு அடிக்கடி போய் இந்தப் பத்திரிகைகளை நாங்கள் படிப்பது வழக்கம். பத்திரிகைகளில் உள்ள விஷயங்களைச் சரியாய்ப் புரிந்து கொள்ளும் சக்தி எங்களுக்கு அப்போது இல்லை. இருந் தாலும் இப்பத்திரிகைகளைக் கையிலெடுத்துப் பார்ப் பதில் ஓர் இன்பம்.

வங்காளத்திலுள்ள மீர்ஜாபூர் என்னும் ஊரில் வெடி குண்டு வெடித்தது. அந்த வெடி குண்டின் ஓசை என் காதில் விழுந்தது! ஆங்கில உத்தியோகஸ்தர் ஒருவர் மேல் குறி வைக்கப்பட்ட அந்தக் குண்டு, ஒரு பாவமும் அறியாத இரண்டு ஆங்கிலப் பெண்களைக் கொன்றது.

அப்போது எனது உணர்ச்சி என்ன ? பரிதாபமா ? கோபமா ? களிப்பா ? எனக்கே தெரியாது. ஏதோ ஒரு உணர்ச்சி மட்டும் உள்ளத்தில் உதித்தது என்பது தெரியும்.

இந்த வழக்கில் 36 பேர் கைது செய்யப்பட்டார்கள். அவர்களுடைய ஊர், பெயர், வரலாறு ஒன்றும் எனக்குத் தெரியாது. **அரவிந்த கோஷ்** என்னும் ஒரு பெயர் மட்டும் என் உள்ளத்தில் பதிந்தது. காரணம் ? தெரியாது. முன் பின் கேள்விப்படாத பெயர். வெகு நாள் பழகிய ஒரு நண்பன் ஆபத்தில் அகப்பட்டுக்கொண்டது போன்ற மன உணர்ச்சி அப்போது உண்டாயிற்று. இந்த வழக்கிலும், இதற்குப்பின் தொடங்கிய மற்றொரு வழக்கிலும் அரவிந்தர் குற்றவாளியல்ல என்று தீர்மானிக்கப்பட்டது.

போலீஸ் அதிகாரிகளுக்கு இவர்மேல் கண். வங்காளத்தில் உண்டான கிளர்ச்சிக்கு அரவிந்தரே அடிப்படையான காரணமென்பது அவர்கள் நம்பிக்கை. எப்படியாவது, இவரை இந்தியாவிலிருந்து வெளியேற்ற வேண்டுமென்ற முயற்சி நடந்து வந்தது. இந்தச் செய்தி அரவிந்தர் காதிற்கு எட்டியது, வங்காளத்தில் குடியிருந்தால், தான் கொண்டிருக்கும் நோக்கத்திற்கு இடையூறாயிருக்குமென்று எண்ணி, கல்கத்தாவுக்கு அருகில் உள்ள பிரெஞ்சுப் பகுதியான சந்திர நாகூருக்குப் போய்விட்டார். சில மாதங்கள் அங்கே தங்கியிருந்து, 1910-ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 4-ந் தேதி புதுச்சேரியை வந்து அடைந்தார்.

* * *

அரவிந்தரை நேரில் பார்க்க வேண்டுமென்று எனக்கு வெகு காலமாக ஆசை யிருந்தது. அந்த ஆசை

இப்பொழுது நிறைவேறியது. அனேக வருடங்களாக அரவிந்தர் தமது ஆசிரமத்தில் ஒரு புறம் தனிமையிலிருந்து யோக நிலையில் ஈடுபட்டிருக்கிறார். வருடம் ஒன்றுக்கு மூன்று முறைதான் அன்பர்களுக்கு காட்சி கொடுக்கிறார். அவர் பிறந்த நாளாகிய ஆகஸ்டு மாதம் 15ஆம் தேதி, அவர் ஞானம் பெற்ற நாளாகிய நவம்பர் 24, அன்னையின் பிறந்த நாளாகிய பிப்பரவரி 21-இந்த நாட்களில்தான் அவருடைய தரிசனத்தைப் பெறலாம்.

இந்த வருடம் நவம்பர் 24-ஆம் தேதி புதுச்சேரிக்குத் போவதென்று தீர்மானம் செய்து, அரவிந்தருடைய முக்கிய சீடர்களில் ஒருவரும் என்னுடைய நண்பருமான **திலிப் குமார் ராய்** அவர்களுக்குக் கடிதம் எழுதினேன். ஆசிரமத்திலேயே நான் தங்குவதற்கும் ஏற்பாடு செய்யும்படி அவரைக் கேட்டிருந்தேன்.

நவம்பர் 23-ஆம் தேதி காலை 11 மணிக்கு இரண்டு நண்பர்களுடன் புதுச்சேரி போய்ச் சேர்ந்தேன். ஆசிரமத்திற்கு வரும் விருந்தினர்கள் தங்குவதற்கென்று "**கோல்கொண்ட்**" என்ற பெயருள்ள ஓர் அழகிய கட்டடம் அமைக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொருவருக்கும் ஒரு தனி அறை உண்டு. குளித்தல் முதலிய கடன்களைச் செய்வதற்குப் பொதுவான அறைகள் இருந்தன. அது அமைதியும், சுத்தமும் நிறைந்த இடம். ஆடம்பரமான அமைப்பு ஒன்றுமில்லை. ஆனால், எங்கே பார்த்தாலும் பளிங்குபோல் சுத்தமும் போதுமான எல்லா வசதிகளும் மன அமைதியை வளர்க்கும் சூழ்நிலையும் கொண்டதாய் அவ்வாசிரமம் விளங்குகிறது,

காலை 7 மணி, 11½ மணி மாலை 7 மணி உணவு வேளைகள். பொதுவாய் அமைக்கப்பட்டிருக்கும் உண வுச் சாலைக்கே உண்பதற்குச் சென்றோம். ஓர் அறையில் மேஜைகளின் பேரில் உணவுகள் வைக்கப்பட்டிருக்கின் றன. அவைகளைப் பரிமாறுவதற்குப் பெண்கள் மேஜைப்புறம் நின்றுகொண்டிருக்கின்றனர். முதலில் ஒரு தட்டத்தையும் இரண்டு கிண்ணங்களையும் கொடுக்கி றார்கள். அடுத்த மேசையிடம் சோறு, கோதுமை ரொட்டி, ஆகியவற்றை மற்றொருபெண் வேண்டுமளவும் தட்டத்தில் இடுகின்றாள். அடுத்தாற்போல், ஒரு பெண் ஒருகூட்டும், தயிரும் கிண்ணங்களில் பரிமாறுகிறாள். பின் கனிந்த இரண்டு வாழைப்பழங்கள் தரப்படுகின்றன. இது பகல் உணவு. மாலையிலும் இதுபோலத்தான்; ஆனால், தயிருக்குப் பதிலாக நல்ல பால் கொடுக்கப்படு கிறது. காலையில் கோதுமை ரொட்டி, பால் அல்லது "கோகோ" வாழைப்பழம் அளிக்கப்படுகின்றன.

அடுத்த அறையில் பாய்களும் மணைகளும் வைக்கப் பட்டிருக்கின்றன. உணவை எடுத்துக்கொண்டுபோய், இந்த அறையில் உண்ண வேண்டும். உண்டபின் வெளியி லிருக்கும் ஓர் அறையில் தட்டத்தையும் கிண்ணங்களை யும் கொடுத்துவிடவேண்டும். இந்த இடத்தில் இவை களைக் கழுவிச் சுத்தம் செய்யச் சாதகர்கள் இருக்கின்ற னர். அலம்பும் முறை மிகவும் கவனிக்கத்தக்கது. (சுத் தம் என்றால் அதற்குமேல் சுத்தம் காணமுடியாது.) உணவு சாதாரணமானதாக யிருந்தபோதிலும் மிகவும் பரிசுத்தமானது.

ஆசிரமத்தின் நடவடிக்கைகள் எல்லாம் 'அன்னை' என்று போற்றப்படும் ஒரு பிரெஞ்சு அம்மையின் அதிகா

ரத்திற்கு உட்பட்டே இருக்கின்றன. அவர் இட்ட பணிகளைச் செய்வதே சாதனம் என்று ஆசிரமவாசிகள் வசிக்கின்றனர். ஆசிரமத்தின் கட்டுப்பாடும் நடைமுறையும் இந்த அம்மையின் ஊக்கத்தாலும் திறமையாலும் தான் நடைபெறுகின்றன.

நவம்பர் மாதம் 24 ஆம்தேதி பகல் 2-மணி முதல் 4-மணி வரையில் தரிசன வேளை. முன்னமே அனுமதி பெற்ற எவரும் அரவிந்தரின் தரிசனம் காணலாம். ஆயிரக் கணக்கான மக்கள் அமைதியாய், ஒழுங்காய் 'கியூ' வரிசையில் நின்றுகொண்டிருக்கின்றனர். மேல்மாடியிலுள்ள ஓர் அறையில் அரவிந்தரும் அன்னையும் வீற்றிருக்கின்றனர். திலிப் குமார் ராய் என்னையும், என் நண்பர்களையும் மாடிக்கு அழைத்துச் சென்றார். இரண்டு நிமிஷம்தான் நின்று தரிசித்தேன்.

"தேஜஸ்" என்னும் சொல்லின் பொருளை அப்பொழுது தான் அறிந்தேன். அரவிந்தருக்கு இப்போது வயது 76. அவர் உடலின் மினுமினுப்பும் ஒளியும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. தெய்வீக சாந்தம் என்பதை அவர் முகத்தில் கண்டேன். அவர் புன்னகையில் அன்பு குடிகொண்டிருந்தது. நான் கண்டது தெய்வ சக்தியின் உருவம். தெய்வசக்தியை இயற்கையின் கம்பீரமான காட்சிகளில் காணலாம்; அரவிந்தரைப் போன்ற மானிட உருவத்திலும் காணலாம்.

அரவிந்தரின் வாழ்க்கை நம் தாய் நாட்டின் வருங் காலச் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அத்தியாயமாகும். காலச் சக்கரம் இடைவிடாமல் சுழன்றுகொண்டே இருக்கிறது. உள்ளம் இருளால் மூடப்பட்டு, உடல் அடி

மைத் தனத்தால் கட்டுப்பட்டு 'வெகு காலம் வாழ்வின் ஒளியில்லாமல் வாழ்ந்தோம். பயங்கரமான இருளும் சூரிய வெளிச்சத்திற்கு இடம் கொடுத்துத்தானே ஆக வேண்டும்? நம் வாழ்க்கையின் வானத்தில் வெளிச்சம் தோன்றியது முதல், பல மகான்கள் நம்மைத் தட்டி எழுப்பிக்கொண்டு வந்திருக்கின்றனர். **ராஜா ராம் மோகன் ராய், தயானந்த சரஸ்வதி, ராமகிருஷ்ண பரம ஹம்ஸர், விவேகானந்தர், பங்கிம் சந்திர சட்டர்ஜி, ரவீந்ரநாத் தாகூர், பால கங்காதர திலகர், சுப்பரமண்ய பாரதி, சுத்தானந்த பாரதி, அரவிந்தகோஷ்** இவர்களெல்லாம் நம் நாட்டின் நீண்ட தூக்கத்தைப் போக்க வந்த மகான்கள்; ஆண்டவன் அருளைப்பெற்ற யோகிகள், கவிகள்; சாமான்னிய தேச பக்தர்கள் மட்டுமல்லர்.

நம் நாடு விடுதலையடைந்த நாள் ஆகஸ்டு 15-ஆம் தேதி. அந்தத்தினமே அரவிந்தர் பிறந்த நாள். இந்த இரண்டு நிகழ்ச்சிகளுக்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டோ? யாரே அறிவார்? மனிதன் அறிவுக்கு எட்டாத விஷயங்களில் இதுவும் ஒன்று.

யோகி அரவிந்தர், மகாத்மா காந்தி இவர்கள் காலத்தில் நாமும் வாழ்ந்தோம்; இவர்களைக் கண்ணாரக் கண்டோம். சுதந்திர தினத்தையும் கண்டோம். நாமும் இறைவன் அருளைக்கொஞ்சமாகிலும் பெற்றவர்கள்தாம்.

* * *

அரவிந்த ஆசிரமத்திற்கு என்னை இழுத்தவை இரண்டு சக்திகள். ஒன்று அரவிந்தர்: மற்றொன்று யோகி சுத்தானந்த பாரதி. இவர் யோகி மட்டு மல்ல. தமிழ் நாட்டின் தலை சிறந்த கவிமணி. இயல். இசை, நாடகம் என்னும் முத்தமிழிலும் அரும் பெரும் செல்வத்தைத்

தமிழ் மக்களுக்கு அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிருர். அரவிந்த ஆசிரமத்தில் 25 வருடம் தவம் புரிந்து யோக சித்தியை அடைந்தவர். பல மொழிகளில் பயிற்சி பெற்ற வர். இவர் ஒரு கலைக் களஞ்சியம்.

அரவிந்தர், சுப்பிரமண்ய பாரதி—இவர்களைப் போல சுத்தானந்தரும் தேச பக்தியிலும் தேச சேவையிலும் ஈடுபட்டவர். இவர்களைப் போன்ற தேச பக்தர்கள் யோகக் கவிகளா யிருப்பதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. சுதந்திர இயக்கமும், கலை மறுமலர்ச்சியும் ஒன்ருே டொன்று பிணைந்த நிகழ்ச்சிகள். நாட்டின் கலை உணர்ச்சி வளர வளரச் சுதந்திர உணர்சி மேலோங்கும். சுதந்திர உணர்ச்சி கலை வளர்ச்சியாய் மலரும்.

தமிழ் மறுமலர்ச்சி, இந்தியா என்னும், பெரிய பூந்தோட்டத்தில் உண்டான மறு மலர்ச்சியின் ஒரு அம் சம்தான். தமிழ் நாடெங்கும் மறுமலர்ச்சியின் மணம் வீசுகின்றது, தமிழ்ப் பூந்தோட்டத்தைப் போற்றி வளர்த்து வரும் தொண்டர்களிலெல்லாம் யோகி சுத்தா னந்த பாரதி தலை சிறந்து விளங்குகிருர்.

புதுச்சேரியில் இவரை நான் தரிசித்ததோடு மட்டும் இல்லை, இரண்டு நாள் இவருடன் அளவளாவும் பாக்கிய மும் எனக்குக் கிடைத்தது, அவர் இசை பாடக் கேட் டேன்; அவர் இலக்கிய வாக்கைக் கேட்டேன். தமிழ் வளர்ச்சியில் சுத்தானந்தருக்கு இருக்கும் ஆர்வம் சொல்ல முடியாது. சுத்தானந்தர் சும்மா இருக்கும் சந்நியாசி யல்ல. ஊக்கமும் ஆர்வமும் கொண்ட தொண்டர்; நிஷ்காம்ய கர்ம யோகி.

நல்லாரைக் கண்டேன்; நலமிக்க நல்லார் சொல் கேட்டேன்; நல்லாரோடு உரையாடினேன்; அவர் குணங்கள் உரைத்தேன்,

6

# 11. பணமும் பஞ்சமும்

—○❋○—

**நா**டுகளில் உண்டாகும் போர்களினால் ஏற்படும் சக்கடங்கள் பல. அவற்றுள் ஆட்சேதம், பொருட் சேதம், நாடுகள் சேதம் ஒரு புறம் இருக்க, அன்றாட வாழ்க்கைக்குரிய பொருள்கள் கிடைப்பதும் ஒரு சங்கட மானதாகும். அதாவது அப்பொருள்கள் கிடைப்பதே அருமையாகிவிடும். அப்படிக் கிடைப்பதானால் ஒற் றைக்கு இரட்டை விலையோ மும்மடங்கு விலையோ அன்றி அதற்கு மேலே கொடுத்தோ வாங்கவேண்டியிருக்கும். நாட்டில் போர் தொடங்குவதற்குமுன் ஒரு ரூபாய்க்கு விற்ற ஒரு பற்பொடி டப்பி, போர்க்காலத்தில் நாலு ரூபாய்க்கு விற்கப்படுவதிலிருந்து நன்குஉணர்ந்துகொள்ள லாம். ஆனால் இங்கு ஓர் ஐயம் தோன்றக்கூடும். அதா வது சண்டை நிகழும் காலத்தில், வெளிநாடுகளிலிருந்து வரும் பொருருள்களுக்கு வேண்டுமானால் விலை அதிகமாக இருக்கலாமே அன்றி உள் நாடுகளில் உள்ள சாமான்கள் ஏன் அதிக விலைக்கு விற்கப்படவேண்டும் ?

சண்டை நிகழும் காலங்களில் பொருள்களின் விலை மிகுதிப்படுதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. சேனைகளின் தேவையின் பொருட்டும், நம் சார் பில் போரில் ஈடுபட்டிருக்கும் நேசநாடுகளுக்கும் தேவையான சாமான்களைச் சர்க்கார் கோடிக்கணக்காக வாங்கி அனுப்புகிறார்கள் இதனால் பொது மக்களுக்கு வேண்டிய அளவு பொருள்கள் கிடைப்பதிற்கில்லாமல் போகிறது. இதனால் பொருள்களின் விலை ஏறிவிடுகிறது,

இரண்டாவது காரணம், சண்டையின்போது, நாட்டில் பொருள்கள் குறைவாக இருக்கின்றன. பணம் மட்டும் மக்களிடத்தில் அதிகமாக நடமாடத் தொடங்குகிறது. இதனால், போட்டிபோட்டும் பண்டங்களைப் பெறவேண்டி இருப்பதால் பொருள்களின் விலை ஏறி விடுகிறது.

சர்க்கார் சண்டைக்காலங்களில் அவ்வளவு சாமான்களையா வாங்குகின்றனர் என்று நினைக்கலாம். ஆம் பெருவாரியான சாமான்களை வாங்குகின்றனர். போர் தொடங்கியதிலிருந்து—அதாவது 1939 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதமுதல் 1942 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம்வரையில், சர்க்கார் சப்ளை இலாக்கா மூலம் 455 கோடி ரூபாய்ச் சாமான்களை வாங்கி இருக்கின்றனர். அதற்குப் பிறகும் வருடா வருடம் சுமார் இரண்டுகோடி ரூபாய்க்குப் பொருள்களை வாங்கியிருக்கின்றனர்.

சண்டையில் நாடு ஈடுபட்டிருக்குங் காலத்தில் நாட்டில் புதுக்கரன்ஸி நோட்டுக்கள் ஏராளமாக நடமாடுவதை நாம் கவனித்திருக்கலாம், அந்தச் சமயத்தில் மிகுதியாக நோட்டுக்கள் அச்சடித்து நடமாட்டத்தில் விடப்பட்டன என்பதைக் கீழே குறிப்பிடும் கணக்கிலிருந்து அறிந்து கொள்ளலாம். 1930 ஆம் ஆண்டு ஜனவரிமாதம் கணக்குப்படி மக்களிடையே, 203 கோடி ரூபாய் நோட்டுக்கள் இருந்தன, ஆனால் சண்டை நடக்கும்போது 734 கோடி ரூபாய் நோட்டுக்கள் மக்களிடையே செலாவணியாகத் தொடங்கின. இந்தத்தொகையைக் கேட்டதும், சர்க்கார் தனக்குத் தேவையான நோட்டுக்களை அச்சடித்து மக்களுக்கு வழங்கிவிடலாம் என்று நினைத்து

விடக்கூடாது. சர்க்கார் எத்தனை நோட்டுக்களை அச்சடித்தாலும், அத்தனைக்கும் அரசாங்கத்தார் நிதியில் ஆதாரம் இருக்கவேண்டும். ஆதாரமாவது தங்கம், வெள்ளி நாணயங்கள்,கவர்மெண்டு பாண்டு போன்றவை களே ஆகும். இத்தகைய ஆதாரங்கள் இல்லாமல் சர்க்கார் நோட்டுக்களை அச்சடிக்க இயலாது. வெளியிட அதிகார மும் கிடையாது, இதைப்பற்றிச் சட்டமும் உண்டு. அப்படி அச்சடித்து வெளியிட்டால், சர்க்காரே சட்டத்திற்கு மீறிய குற்றத்திற்கு ஆளாக நேரிடும். மேலே 734 கோடி ரூபாய் நோட்டுக்கள் இருக்கின்றன என்று கூறினோம் அல்லவா. இவற்றிற்கு ஆதாரமாக சர்க்கார் கஜானவில், 45 கோடி ரூபாய் தங்கமும், 15 கோடி ரூபாய் வெள்ளி நாணயங்களும், 120 கோடி ரூபாய் பெறுமான இந்திய கவர்மெண்டு பாண்டுகளும் 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்மெண்டு பாண்டுகளும் உள்ளன.

அரசாங்கத்தார் ஏன் 734 கோடி ரூபாய் கரன்ஸி நோட்டுக்களை வெளியிட வேண்டும் என்று கேட்கலாம், இதற்குரிய விடையினை மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இன்னமும் இதனைத் தெளிவுற விளக்கப்படுவதைக் காண்க.

பிரிட்டிஷ் கவர்மெண்டுக்கும் நமக்கும் நெருங்கிய தொடர்புண்டு என்பதைக் கூறவேண்டியதில்லை. ஆகவே பிரிட்டிஷ் கவர்மெண்டின் சார்பாக நமது இந்தியா கவர் மெண்ட் கோடிக்கணக்காக நம் நாட்டில் சாமான்கள் வாங்கவேண்டி இருக்கிறது. இந்தச் சாமான்களை வாங்கு வதானல், பணம் கொடுத்துத்தானே வாங்கவேண்டும், இதற்குப் பிரிட்டிஷ் கவர்மெண்டு கிரயப்பணம் கொடுக்க

வேண்டும். அவர்கள் தேசத்தில் வழங்கும் நாணயம் **ஸ்டர்லிங்** எனப்படும். அதன் மதிப்பு ரூ13-4-0. எனவே கவர்மெண்டுக்காக நம்முடைய சர்க்கார் 13,250 ரூபாய்க்குப் பஞ்சு வாங்குகிறார்கள் என்றால், பிரிட்டிஷ் சர்க்கார் இந்தப் பஞ்சுக்காக 1000 ஸ்டர்லிங்கை லண்டனில் இந்தியா மந்திரியிடம் கொடுத்துவிடுகின்றனர். இந்த 1000 ஸ்டர்லிங்கை ஆதாரமாக வைத்துக்கொண்டு 13250 ரூபாய்க்கு நோட்டுக்களை அச்சடித்து பஞ்சின் கிரயத்தை நம் வியாபாரிக்குக் கொடுத்துவிடுகிறார்கள். நம்முடைய நோட்டுக்களுக்கு இப்போது 554 கோடி ரூபாய் பெறுமான பிரிட்டிஷ் கவர்மெண்ட் பாண்டுகள் ஆதாரமாக இருக்கின்றன. சண்டைமுடியும்வரையில் பிரிட்டிஷ் கவர்மெண்டார் நம் நாட்டில் மேலும் மேலும் சாமான்களை வாங்கிக் கொண்டிருந்தால் நோட்டுக்களும் அதிகமாகிக்கொண்டே போகும். 1943 ஆம் ஆண்டு ஜூன் மாதம் முதல் 1943ம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் அதாவது ஓர் ஆண்டில்—28 கோடி ரூபாய் நோட்டுக்கள் அதிகமாகி விட்டன. அதன் பின்னும் மாதம் ஒன்றுக்குக்கு 12 கோடி முதல் 15 கோடிவரையில் நோட்டுக்கள் பெருகிக்கொண்டே போகின்றன.

இப்படி நோட்டுக்கள் அச்சடித்து வழங்கிவந்தால், பொருள்களின் விலை அதிகமாகிக்கொண்டே போகுமே. இந்த விலையின் ஏற்றத்தைத் தடுப்பதற்குச் சர்க்கார் வழி காணவில்லையோ என்று நினைக்கலாம். அரசாங்கத்தார் இதுபற்றித் தன் சிந்தனை செலுத்தாமல் இல்லை. முயற்சிகளை மேற்கொள்ளாமல் இல்லை, வரிகளை அதிகப்படுத்தியிருக்கின்றனர். வரிகளைத் தாமதமில்லாமல் வசூல்செய்ய

வேண்டிய ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர். மில்கள் போன்ற பெரிய கைத்தொழில் கம்பெனிகள் பங்குதாரர்களுக்கு அதிகமாக இலாபத்தைப் பிரித்துக்கொடுக்காமல் இருக்கும்படி, வந்த ஊதியத்தில் வரி போக 100 க்கு 13 வீதம் சர்க்காரிடம் டிபாசிட் செய்யவேண்டுமென்று கட்டாயச் சட்டத்தை உண்டாக்கி இருக்கின்றனர். கவர்மெண்ட் பாண்டுகளில் பணத்தைப் போடும்படி மக்களைப் பல விதத்தில் தூண்டுதல் செய்கின்றனர். துணி, நூல், அரிசி முதலிய பொருள்களை இன்ன விலைக்கு மேல் விற்பனை செய்யக்கூடாதென்று கட்டளை பிறப்பித்திருக்கின்றனர். அரசாங்கம் இவற்றைவிட வேறு என்ன தான் செய்ய இயலும்.

பொது மக்களும் அரசாங்கத்தோடு ஒத்து உழைக்க வேண்டும். தமக்கு இன்றியமையாது வேண்டப்படும் பொருள்களைமட்டும் வாங்கவேண்டும், ஆடம்பரத்திற்கும், அனுவசியத்திற்கும் பொருள்களை வாங்கக்கூடாது. ஆலும் வேலும் பல்லுக்குறுதி என்னும் பழமொழியினை அறிந்து, நாம் ஆலங்குச்சியிலும் வேலங்குச்சியிலும் பல்லைச் சுத்தம் செய்யாமல் மேனுட்டுப் பல் பசைகளை ஏன் அதிக விலை கொடுத்து வாங்கவேண்டும். இப்படியே ஒவ்வொன்றையும் சிந்தித்துப்பாருங்கள். அப்போது அவசியம் இல்லாதவற்றையெல்லாம் வாங்கிப் பொருளை வீணுக்குகிறேம் என்பது தெரியவரும் அல்லவா ?

## ராஜாஜியின் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| வியாசர் விருந்து | 10 | 0 |
| ,, மலிவுப் பதிப்பு | 7 | 8 |
| அற நூல்கள் | 5 | 0 |
| கதைகள் | 4 | 0 |
| கட்டுரைகள் | 4 | 0 |
| கண்ணன் காட்டிய வழி | 2 | 0 |
| ஆத்ம சிந்தனை | 1 | 8 |
| பஜகோவிந்தம் | 1 | 0 |
| நிரந்தரச் செல்வம் | 1 | 8 |
| அபேதவாதம் | 1 | 0 |
| சிறையில் தவம் | 3 | 0 |
| உபநிஷத பலகணி | 1 | 0 |
| வேதாந்த தீபம் | 1 | 4 |
| முத்துக் குவியல் | 1 | 8 |
| மணிமொழிகள் | 1 | 4 |
| உவமைகள் | 1 | 0 |
| மணிவாசகம் | 1 | 12 |
| திண்ணை ரசாயனம் | 0 | 12 |
| அச்சமில்லை | 0 | 6 |
| போட்டி ஒழிக | 0 | 12 |
| தாவரங்களின் இல்லறம் | 2 | 0 |
| ராமகிருஷ்ண உபநிஷதம் | 1 | 4 |
| பிள்ளையார் காப்பாற்றினார் | 1 | 8 |
| பொதுப்பணி | 1 | 8 |
| ஸோக்ரதர் | 1 | 8 |
| வள்ளுவர் விருந்து | | |

## கல்கியின் நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| சிவகாமியின் சபதம் | 15 | 0 |
| அலை ஓசை | 12 | 8 |
| பார்த்திபன் கனவு | 7 | 8 |
| அபலையின் கண்ணீர் | 1 | 4 |
| சோலைமலை இளவரசி | 3 | 8 |
| பொய்மான் கரடு | 3 | 0 |
| ஏட்டிக்குப் போட்டி | 3 | 0 |
| சாரதையின் தந்திரம் | 3 | 4 |
| மாடத்தேவன் சுனை | 2 | 8 |
| அமரவாழ்வு | 2 | 4 |
| மோகினித் தீவு | 1 | 12 |
| மகுடபதி | 3 | 8 |
| சங்கீதயோகம் | 5 | 0 |
| ஒற்றை ரோஜா | 1 | 12 |
| தேவகியின் கணவன் | 1 | 8 |
| நாட்டுக்கொரு புதல்வர் | 1 | 12 |
| நம் தந்தையர் செய்த விந்தைகள் | 1 | 8 |
| பாரதி பிறந்தார் | 3 | 0 |
| ஜமீன்தார் மகன் | 1 | 8 |
| தாகூர் தரிசனம் | 1 | 8 |
| இலங்கையில் ஒருவாரம் | 1 | 8 |
| மூன்று மாதக் கடுங்காவல் | 2 | 0 |
| வீணை பவானி | 2 | 12 |
| மாந்தருள் ஒரு தெய்வம் | 6 | 0 |
| புன்னைவனத்துப் புலி | 1 | 0 |

வெளியிடுவோர் :

# பாரதி பதிப்பகம்

தியாகராயநகரம் : : சென்னை–17.